தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண் - 41

திருப்பூர் மாவட்டக் கல்வெட்டுகள்

தொகுதி-1

திருப்பூர் மாவட்டக் கல்வெட்டுகள்

தொகுதி - 1

பொதுப்பதிப்பாசிரியர்

சி. பி. சிங், இஆப,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ர. பூங்குன்றன்

முனைவர் செ. இராசு

இரா. சிவானந்தம்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2012 - திருவள்ளுவர் ஆண்டு 2042

BIBLIOGRAPHICAL DATA

TITLE	:	**Thiruppur Mavattak Kalvettukal Vol. I**
General Editor	:	Principal Secretary and Commissinor
Editors	:	Dr. R. Poongunran, Dr. S. Raju, R. Sivanantham
Copyright	:	Tamilnadu State Dept. of Archaeology
Subject	:	EPIGRAPHY
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	253
Year	:	2012
No. of Copies	:	500
Type Point	:	12
No. of Pages	:	272
Paper Used	:	80 Gsm Maplitho
Printer & Publisher	:	**State Dept. of Archaeology,** Tamil Valarchi Valaagam, Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 126/-

சி. பி. சிங், இ.ஆ.ப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை- 600 008.

நாள் : 06-01-2012

பதிப்புரை

பண்டைய அரசியல் வரலாறு, சமயம், பண்பாடு ஆகியவற்றை அறிய கல்வெட்டுகளே முதன்மைச் சான்றுகளாக அமைகின்றன. மேலும் தொல்லெழுத்தியல் அடிப்படையில் கல்வெட்டுகளின் காலம் உறுதிபடுத்தப் படுவதற்கும் உறுதுணையாக நிற்கின்றன.

கல்வெட்டுகள் ஒரு குறிப்பிட்ட வட்டார மக்களின் வாழ்க்கைநிலை, வேளாண்மை, தொழில், வாணிபம், நாட்டுப் பிரிவுகள் பற்றி ஆய்வு செய்ய முதன்மைச் சான்றாகத் திகழ்கின்றன. வட்டாரவழக்குகள், மொழிநடை ஆகியவற்றைப் பற்றி அறியவும் துணைபுரிகின்றன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுகளைப் படியெடுக்கும் பணியினை முதன்மைப் பணிகளில் ஒன்றாக செய்து வருகின்றது. தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களில் 25 மாவட்டங்களில் கல்வெட்டுப் படியெடுக்கும் பணி நிறைவுற்றுள்ளது. ஏனைய மாவட்டங்களில் படியெடுக்கும் பணி நடைப்பெற்று வருகிறது. இத்துறை கல்வெட்டுப் பிரிவு வாயிலாக 6000 கல்வெட்டுகள் 40 தொகுதிகளாக இதுவரை வெளிவந்துள்ளன. இத்தொகுதி தமிழ்நாடு கல்வெட்டுகள் வரிசை எண் 41ஆக வெளிவருகிறது.

"திருப்பூர் மாவட்டக் கல்வெட்டுகள்" என்னும் இந்நூல் கல்வெட்டறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு மிகப்பயனுடையதாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலினை வெளிக்கொணர அனைத்துப் பணிகளை மேற்கொண்ட இந்நூல் ஆசிரியர்கள் முனைவர் ர. பூங்குன்றன், உதவி இயக்குநர் (ஓய்வு) மற்றும் கல்வெட்டாய்வாளர் திரு. இரா. சிவானந்தம் ஆகியோரின் பணி பாராட்டுதலுக்குரியது. இந்நூலினை நல்ல முறையில் கணினி தட்டச்சு செய்து அட்டைப்படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர்கள் திருமதி. தே. சத்தியவதி, திரு. மு. சக்திவேல் மற்றும் இந்நூலினை சிறப்புற அச்சிட்டு வெளிகொணர்ந்த அச்சுப் பிரிவினர் அனைவருக்கும் எனது பாராட்டுகள்.

இந்நூலினை வெளியிட 2011-2012 ஆண்டிற்கான பகுதி -II திட்டத்தின் கீழ் நிதியுதவி அளித்த தமிழ்நாடு அரசிற்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

உள்ளடக்கம்

வ.எண்.		பக்க எண்
	பதிப்புரை	
	முன்னுரை	
	காங்கேயம் வட்டம்	
1.	பட்டாலி	1
2.	வட்டமலை	21
3.	கண்ணாபுரம்	24
4.	கவுண்டம்பாளையம்	31
5.	சிவன்மலை	33
6.	காடையூர்	35
7.	ஆறுதொழுவு	41
8.	ஆலம்பாடி	44
9.	பார்ப்பினி	45
10.	வள்ளியிறைச்சல்	49
11.	நத்தக்காரையூர்	60
12.	ஆனூர்	69
13.	பரஞ்சேர்வழி	70
	தாராபுரம் வட்டம்	
14.	கொங்கூர்	73
15.	அலங்கியம்	86

16. கோனாபுரம் 96

17. சடையம்பாளையம் 103

18. பொன்னிவாடி 105

19. குண்டடம் 120

20. புஞ்சைத்தலையூர் 142

21. எல்காம்வலசு 143

22. மறவபாளையம் 144

23. பிரம்மியம் 146

24. லக்மண நாயக்கன்பட்டி 183

25. கொழிஞ்சிவாடி 184

26. தாராபுரம் 198

27. தளவாய்பட்டனம் 217

28. மூலனூர் 221

29. மயில்ரங்கம் 225

உடுமலை வட்டம்

30. கல்லாபுரம் 227

முன் அட்டை : பிரம்மியம் கல்வெட்டு (பக்கம் எண் 174-175)

பின் அட்டை : பிரம்மியம் கல்வெட்டு (பக்கம் எண் 151)

முன்னுரை

திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு அரசாணை எண் G.O.Ms. No. 617, 618 Revenue dt. 24-10-2008 வாயிலாக, அக்டோபர் 2008-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து திருப்பூர், உடுமலைப் பேட்டை, பல்லடம், அவினாசி(பகுதி) ஆகிய நான்கு வட்டங்களும்; ஈரோடு மாவட்டத்திலிருந்து தாராபுரம், காங்கேயம், பெருந்துறை(பகுதி) ஆகிய வட்டங்களும் சேர்த்து புதியதாக "திருப்பூர் மாவட்டம்" அமைக்கப்பட்டது. "திருப்பூர் மாவட்டக் கல்வெட்டுகள்" என்னும் இந்நூலில் காங்கேயம், தாராபுரம் ஆகிய இரு வட்டங்களின் கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் திருப்பூர் மாவட்டக் கல்வெட்டுகள் முதல் தொகுதியாகும். இத்தொகுதியில் வடகொங்கு பகுதியின் மையப்பகுதி கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. இக்கல்வெட்டுகள் இடைக்காலத்தைச் சேர்ந்தவை. கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையிலான காலக்கட்டத்தைச் சேர்நதவையாகும். கிரந்த எழுத்தில் அமைந்துள்ள சமஸ்கிருத கல்வெட்டு ஒன்று உள்ளது. விசயநகரர், நாயக்கர் காலக் கல்வெட்டு களும் இடம் பெற்றுள்ளன. சில கல்வெட்டுகள் மன்னர்களின் நேரடி ஆணைகளாக உள்ளன. பல கல்வெட்டுகள் ஊரகமக்கள் பொறித்து வைத்த கல்வெட்டுகளாகும். வடகொங்கில் அமைந்த நாட்டுப் பிரிவுகள் (காங்கய நாடு, பொங்கலூர்க்கா நாடு. நரையனூர் நாடு) சில மட்டும் பயின்று வருகின்றது. நாட்டுப்பிரிவுகளின் பெயர்களும் வெவ்வேறு ஒலிப்புடன் அமைந்துள்ளன. சான்றுக்குக் காங்கய நாடு அழைக்கப் பெறும் முறையைக் காட்டலாம். அந்நாடு காங்கைய நாடு, காங்கேய நாடு என்று இருவிதமாக அழைக்கப்பெறுகின்றது.

அரசியல்

இடைக்காலச் சோழர்கள்

கி.பி. 11-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.13-ஆம் நூற்றாண்டு வரை கொங்குச் சோழரே இப்பகுதியினை ஆண்டனர். அபிமானசோழன், இராஜாதிராஜன், உத்தம சோழன், வீரசோழன், வீரநாராயணன், முதலாம் குலோத்துங்கன், மூன்றாம் வீரசோழன், வீரராஜேந்திரன் மூன்றாம் விக்கிரமசோழன் ஆகியோர் கல்வெட்டுகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. பாண்டியர்களில் வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் ஆகியோரது கல்வெட்டுகளும் உள்ளன.

இடைக்காலச் சேரர்கள்

இம்மரபினரில் கோக்கண்டன் இரவியனுடைய கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. ஒன்று வட்டெழுத்திலும், மற்றொன்று இந்த மன்னனைக் குறிக்கும் போது சந்திராதித்திய குலதிலகன் கலிநிருபன் அழைக்கப்பெறுகிறான். மேலும் கள்வனாயின என்ற அடைமொழி தமிழில் தரப்பெற்றுள்ளது. அதனால் இம்மன்னனை களப்பிரர் என்று கருதுகின்றனர். இவனையும் இவன் மரபினரையும் இடைக்காலச் சேரர் என்று ஒரு சாரார் கருதுகின்றனர். இவனுடைய மரபினரைப் பற்றி நாமக்கல் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. வீரநாராயணன், ரவி கண்டன, ரவி கோதை ஆகிய பெயர்கள் வரிசையாகக் கூறப்பெறுகின்றன. இவர்கள் வழிவந்தவர்கள் அமரபயங்கரன் முதலிய வீர கேரளர்கள்.

கொங்குச் சோழர்களில் முதல் மூன்று மன்னர்களின் கல்வெட்டுகள் கோநாட்டான் என்ற முன்னொட்டுடன் தொடங்குகின்றன் வீர சோழன், கலிமூர்க்கன், விக்கிரம சோழன் ஆகிய மன்னர்களே அவர்கள். விக்கிரமசோழனுக்குப்பின் அபிமான சோழன் என்பவன் ஆண்டுள்ளான். இவன் காலத்துக் கல்வெட்டு தொடக்கப் பகுதி மட்டுமே காணப்படுகிறது. அன்னூர் மன்னீஸ்வரர் கோயிலில் கிடைக்கும் இக்கல்வெட்டு *ஸ்வஸ்திஸ்ரீ* விக்கிரம சோழ அபிமான சோழதேவற்கு என்று மட்டும் உள்ளது. அண்மையில் அவினாசி அருகில் உள்ள நடுவிச்சேரியில் விக்கிரமசோழன் மெய்க்கீர்த்தியுடன் அபிமான சோழ தேவற்கு என்று கூறுகின்றது. கோபி அருகில் உள்ள கல்வெட்டொன்று இதே மெய்க்கீர்த்தியுடன் பராக்கிரம சோழதேவற்கு என்று தொடங்குகின்றது. அதனால் ஒரே மெய்க்கீர்த்தி பயின்று வருவது குறிப்பிடத்தக்கது.

பட்டாலியில் கிடைக்கும் கல்வெட்டொன்று அபிமான சோழ ராஜாதிராஜன் என்ற அரசன் குறிக்கப் பெறுகின்றான். இப்பெயர்களில் அபிமான சோழன் தந்தையென்றும், ராஜாதிராஜன் மகன் என்றும் கொள்ளலாம். இவன் கி.பி. 1085லிருந்து 1100 வரை ஆண்டவன். இராஜராதிராஜன் மகன் உத்தமசோழன் கி.பி. 1100 முதல் 1118 வரை ஆண்டவன், ராஜாதிராஜனுடைய இரண்டாவது மகன் இரண்டாம் வீர சோழன் (கி.பி. 1118 - 1138) கல்வெட்டுப் பட்டாலியில் கிடைக்கின்றது. மேலும் உத்தமசோழனுடைய மகன் வீரநாராயணனின் கி.பி. 1138-49) கல்வெட்டு ஒன்று இந்தத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

முதலாம் குலோத்துங்கன்

உத்தம சோழனுடைய மகன் வீர நாராயணன் ஆட்சி பத்து ஆண்டுகளே நடந்தது. இவனுக்குப்பின் இராஜகேசரி குலோத்துங்கள் (கி.பி. 1149-68) கல்வெட்டுகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இவன் பாண்டியர் தாயாதிச் சண்டையில் தலையிட்டு இவன் மைத்துனன் குலசேகரனுக்காக போரிட்டான். அப்போரில் வெற்றிபெற்றான். இந்த நிகழ்ச்சி பற்றி இலங்கை மகாவம்சம்

குறிப்பிடுகின்றது. உத்தமசோழன் காலம் முதல் வடகொங்கு தென்கொங்கு எல்லைப்புறத்தில் படைகளை நிறுத்தி வைத்தனர். இந்தக் குலோத்துங்கன் காலம் முதல் பிலாம்பிறைக்கோட்டை என்ற ஊரில் ஆயிரவர் படை இருந்தமைப்பற்றிக்குண்டடம் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவன் காலத்தில் நிலக்கொடை, ஊர்க்கொடை மிகுதியாயிற்று.

மூன்றாம் வீரசோழன்

இவனுடைய கல்வெட்டுகள் பட்டாலி, காரையூர் போன்ற இடங்களில் கிடைக்கின்றன. இவன் இருகொங்கும் ஒன்றாக ஆண்டவன் என்று தன்னைக் கூறிக்கொள்கிறான். அதனால் வடகொங்கு, தென்கொங்கு ஆகிய பகுதிகளை ஆண்டான் எனலாம். இந்தச் செய்தி இவனுடைய பத்தொன்பதாவது ஆட்சி ஆண்டிலிருந்து கூறப்பெறுகின்றது. இவன் காலத்தில் நிறைய பிரமதேயங்கள் உருவாக்கப்பெற்றன. பல கோயில்களுக்கு தேவதானம், பள்ளிச்சந்தம் ஆகியவை அளிக்கப்பெற்றன.

இரண்டாம் குலோத்துங்கன்

இவன் காலத்துக் கல்வெட்டுகள் சில கிடைத்துள்ளன.

வீரராஜேந்திரன் (கி.பி. 1207-56)

இந்த மன்னனும் இரு கொங்கும் ஒன்றாக ஆண்டவன் என்று கூறிக்கொள்கிறான். இத்தொகுதியில் இவனுடைய கல்வெட்டுகள் பத்துக்கும் மேல் அச்சிடப்பட்டுள்ளன. இவனுடைய கல்வெட்டுகள் நிலக்கொடையைப் பற்றிக் கூறுகின்றன. பெரும்பாலான கல்வெட்டுகள் மக்கள் அளித்த நிலக்கொடையைப் பற்றிக் கூறுகின்றன. சில கல்வெட்டுகள் அரசனே கொடுத்த நிலக்கொடையைப் பற்றிக் கூறுகின்றன. வீரராஜேந்திரன் காலத்தில் பெரியவடுகன் கலகம் நடந்தமை பற்றிக் கூறப்பெறுகின்றது. இது போசள மன்னன் வீரசோமேஸ்வரன் பற்றியதாகலாம். வீரசோமேஸ்வரன் கல்வெட்டுகள் திங்களூர், பவானி போன்ற ஊர்களில் கிடைக்கின்றன. மறுபடியும் வீரராஜேந்திரன் கொங்கைப் பிடித்தான். இவனுடைய கல்வெட்டுகளில் பழஞ்சலாகை அச்சு கூறப்பெறுகின்றது.

மூன்றாம் விக்கிரமசோழன் (கி.பி. 1273-303)

இம்மன்னனின் கல்வெட்டுகள் இருபதுக்கும் மேல் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றில் கோயில் பணியாளர்களும், அரசு அதிகாரிகளும் நிறைய கொடை அளித்துள்ளனர். மடங்கள் பற்றிய குறிப்புகள் இவன் காலத்தில் கிடைக்கின்றன. வீரராஜேந்திரன் காலம் முதல் அதியமான் என்ற சிற்றரசன் கூறப்பெறுகிறான். இவன் காலத்தில் அவனுடைய (அதியமான்) மகன்கள் கொடை அளித்த செய்தி கூறப்பெறுகின்றது. நிலக்கொடை அளிக்கும்போது எல்லை கூறியுள்ளனர். அந்த எல்லைகளின் காமிண்டன் நிலம், காலிங்கராயன் நிலம் ஆகியவை கூறப்பெறுகின்றன.

பாண்டியர்கள்

பாண்டியர்களில் வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் ஆகிய அரசர்கள் குறிக்கப்பெறுகின்றன. இவர்களில் வீரபாண்டியன் கி.பி. 1265 முதல் 1285 வரை ஆண்டான். அவனுக்குப்பின் சுந்தரபாண்டியன் (கி.பி. 1285-1312) ஆண்டான். இம்மன்னர்கள் கல்வெட்டுகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. இவன் ஆட்சிக்காலம் கொங்குச் சோழர் காலத்திற்குள் அமைவது குழப்பத்தை அளிக்கின்றது. அதனால் கொங்குச் சோழர் ஆட்சியின் இறுதிக்காலம் அரசியல் குழப்பம் மிகுந்ததாக இந்திருக்க வேண்டும்.

போசளர்கள்

போசளர் கொங்கு நாட்டின் மீது படையெடுத்தாலும் வீரவள்ளாளன் நிலையான ஆட்சியைக் கொடுத்தான். இவனுடைய கல்வெட்டுகள் கொங்குநாடு முழுவதும் கிடைக்கின்றன. இவன் காலத்தில் பெருமாள் கோயில்களுக்கு நிறைய நிலக்கொடை அளித்துள்ளான். பவானிசாகரில் மூழ்கியுள்ள டணாயக்கன் கோட்டை (நீலகிரி சாதாரணக் கோடை)யில் உள்ள மாதவப்பெருமாள் கொயிலுக்கு கொங்கு நாடு முழுவதிலுமிருந்து நிலக்கொடை அளித்துள்ளான். இந்தத் தொகுதியில் அக்கோயிலுக்கு அளித்த நிலக்கொடை பற்றி ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது.

த.நா.அ. தொல்லியல் துறை　　　　தொடர் எண் :- 1/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	10
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1095
ஊர்	:	பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	அபிமான சோழன் இராஜாதிராஜன்			
இடம்	:	கரிய காளியம்மன் கோயில்			
குறிப்புரை	:	பிடாரி கோயில் கட்டியச் செய்தி கூறப்பெறுகின்றது.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. கோ அபி
3. மான சோ
4. ழ ஸ்ரீராஜா
5. திராஜ தே
6. வற்கு திரு
7. வெழுத்திட்டு
8. ச்செல்லா
9. நின்ற திரு
10. நல்லியாண்
11. டு பத்தாவ
12. து . . . நாய
13. விச்சி நாய
14. ன் குறும்
15. புள்ளரில் எ
16. ன் மணவா
17. ளன் காவன் அ
18. ரையனைச்
19. சாத்தி எடுப்
20. பிச்ச பிடாரி
21. கோயில் இ
22. து ரக்ஷிப்பா
23. ர் காலிற்பொடி
24. என் தலை மேலின

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 2/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	5
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1278
ஊர்	:	பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	258/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			

இடம் : பால்வண்ணீஸ்வரர் கோயில் வடக்குக் குமுதம்.

குறிப்புரை : கோயிலுக்குத் தோட்டமும் கிணறும் கொடையாக அளித்த செய்தி. எல்லையாகக் கூறப்பெறும் இடப்பெயர்கள் குறிப்பிடத்தக்கவை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு அஞ்சாவது பட்டாலியூரோம் எங்க
2. ள்மேக்கே கிணறுந்தோட்டமும் யிதுக்கெல்லையாவது கிழக்கெல்லை கனியான்
3. தோட்டத்துக்கு மேக்கும் தெக்கெல்லை மேலைச்சேரியார் பட்டிக்கு வடக்கும் மேக்கெ
4. ல்லை கீழ்ச்சேரியார் பட்டிக்கு கிழக்கும் வடக்கெல்லை கீழச்சேரியார் தோட்டத்துக்கு
5. தெற்கும் இந்நான் கெல்லைக்குட்பட்ட தோட்டமும் கிணறும் மணக்கூவலு
6. ம் தோட்டமும் யிதுக்கெல்லையாவது கிழக்கெல்லை குண்டையூராளி தோட்டத்துக்கு மே
7. ற்கும் தெற்கெல்லை யிட்டலுக்கு வடக்கு மேற்கெல்லை கொம்பதிக்குக் கிழக்கும் வடக்கெல்லை

8. கீழச்சேரியார் தோட்டத்துக்குத் தெற்கும் யிந்நான் கெல்லைக்குட்பட்ட தோட்டமும் கிணறு

9. ம் யிரண்டும் பால்வணீஸ்வரமுடையார் பண்டாரத்தில் யாடுவி

10. ற்று யிருபது அச்சுக் கொண்டு கல்வெட்டிக் குடுத்தோம் பட்டாலியூரே

11. ாம் பால்வணீஸ்வரமுடையாற்கு பந்மா[ஹே]ஸ்வர இரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 3/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	10
வட்டம்	: காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1283
ஊர்	: பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	256/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	: மூன்றாம் விக்கிரமசோழன்			
இடம்	: பால்வண்ண ஈஸ்வரர் கோயில் வடக்குக் குமுதம்.			

குறிப்புரை : காஞ்சிக் கூவத்துண்டத்து ஊரில் இரட்டுறமொழி சோழப் பெருந்தெருவில் வசிக்கும் வியாபாரி சோலை சூரியதேவன் என்பவன் பால்வெண்ணீசுரமுடையாற்கு சந்திவிளக்கு வைக்க ஒரு கழஞ்சு பொன் கொடுத்தச் செய்தி

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்
2. டு ஒன்பதாவதுக் கெதிராவது காஞ்சிக் கூவத்துண்டத்து இரட்டுற மொழி சோழப் பெருந்தெருவில் வியாபாரி சோலை சூரி
3. யதேவனேன் பால்வெண்ணிசுரமுடையாற்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின பொன் கழஞ்சுக்கு மிக்கோயிற் காணி
4. யுடைய சிவப்பிராமணரில் கடைக்குறிச்சி பால்வணத்தானும் உடையான் ஆண்டவருள்ளிட்டாரும் கூத்தனா
5. ல்லானுள்ளிட்டாரும் இவ்வனை
6. வோம் இச்சந்தியா தீபஞ் சந்திராதி
7. த்தவரை செலுத்தக்கடவோம் குடங்
8. கொடுகோயில் புகுவான் திருவிளக்
9. கெரிப்பதாக இது பந்மாஹேஶ்வர ர
10. க்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 4/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	20
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1223
ஊர்	:	பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	259/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : பால்வண்ண ஈஸ்வரர் கோயில் தெற்குச் சுவர் குமுதம்.

குறிப்புரை : அரசன் சில ஊர்களிலிருந்து வரும் வரி நெல்லை பள்ளியறை நாச்சியார்க்கு அளித்தச் செய்தி கூறப்பெறுகின்றது. நாச்சியார் சிலையை அரசனே செய்து வைத்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்தி கோனேரின்மை கொண்டாந் பட்டாலியில் ஆளுடையார் பால்வெண்ணீசுரமுடையார் தேவர் கன்மிகளுக்கு நம்மோலை குடுத்தபடியாவ . . . . நார்க்குத் திருப்பள்ளியறை நாச்சி
2. யார் அக்கன் திருநாமத்தால் எழுந்தருளுவித்த நாச்சியார்க்கு நாளொன்றுக்கு அமுதுபடி அரிசி நானாழியாக விஞ்சனமுட்பட ஒன்றுமூன்றாக நெல் குறுணி நானாழியாக . . . க்கு நெல்
3. நாற்பத்தைங்கலமும் வீரசோழ வளநாட்டின் கற்றாயந்காணியான வீரசோழ சதுவேதிமங்கலத்து நமக்கு இறுக்கக் கடவ இறைநெல்லின் நாற்பத்திரு . . . . தக்கும் பசானம் ஒருபத்திருக . . .
4. லநே தூணிப்பதக்கும் ஆக இருபதாவது கார்முதல் இராசகேசரியால் கொண்டு வருவார்களாகவும் அமுதுசெய்த சோறு நாழியால் கட்டி இ . . . கவும் இப்படி சந்திராதித்தவற்

5. செல்வதாகச் செம்பிலுஞ்சிலையிலும் வெட்டிக் கொள்ளப்பெறுவார்களாக நம்மோலை குடுத்தோம் நந்தமர் எற்பெயறப்பட்டாரும் பாற் . . . . . இவை சோழ குலமாணிக்க மூவே

6. ந்த வேளானெழுத்து இது உய ஆவது நாள் கூய துக்கு இவை விலாடத்தரையஞ் எழுத்து இத்தன்மத்தை அழிவு செய்வான் யெழெச்ச மறுவாந் பன்மாஹேஶ்வர ரகைஷ உ

த.நா.அ. தொல்லியல் துறை　　தொடர் எண் :- 5/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	21
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1294
ஊர்	:	பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	257/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
அரசன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			

இடம் : பால்வண்ண ஈஸ்வரர் கோயில் வடக்குக் குமுதம்.

குறிப்புரை : இரவி நல்லூரில் வசிக்கும் காவலன் மன்றாடிகளில் காளி என்பவன் பட்டாலி பால்வெண்ணீசுவரமுடையார்க்கு சந்திவிளக்கு வைக்க ஒரு கழஞ்சு பொன் கொடையாக அளித்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு இருபத்தொன்றாவதின் இரவிநல் லூரில்லிருக்குங் காவலன்
2. மன்றாடிகளில் காளி காளியேந் பட்டாலியில் ஆளுடையார் பால்வெண்ணீஸ்வமுடையார்
3. க்குச் சன்தியாதீபம் ஒன்றுக்குக் குடுத்த பொன் கழைஞ்சும் இக்கோயில் காணியுடைய சிவப்பிரா
4. ணன் திருமழுவுடையானான கடைக்குறிச்சி செம்பாதியும் கல்பொன் கழைஞ்சுங் கொண்டு நித்தப்படி சந்திராதித்தவற் செல்வதாக இச்சந்தி
5. யாதீபம் குடமுங் குச்சியும் கொண்டு இக்கோயில் புக்காந் இவ்விளக்கிடுவாநாக பந்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 6/2010**

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	: காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13–ஆம் நூற்றாண்டு
ஊர்	: பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	260/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
அரசன்	: வீரராசேந்திரன்			
இடம்	: பால்வண்ண ஈஸ்வரர் கோயில் தெற்குச் சுவர்.			

குறிப்புரை : வீரராசேந்திரனின் பெயரால் இக்கோயிலில் ஏற்படுத்தப்பட்ட சந்தியின்போது இறைவனுக்கு அமுதுபடிக்காக ஆண்டுத் தேவைக்கு நாற்பத்தைந்து கலம் நெல்லுக்காக முக்கழஞ்சேய் முக்காலே மஞ்சாடி பொன் கொடை அளிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்ரீ ராஜகேஸரி வன்மரான திரிபுவனச்சக்கரவத்தி ஸ்ரீ வீரராஜேந்த்ர தேவர்க்கு யாண்டு விஸ்வங்கலம் தி(ரு)வ னச்சக்கரவத்தி கோனேரினமை கொண்டாந் பட்டாலியில் ஆளுடையார் பால்வெண்ணீஸ்வரமுடையார்க்கு அமுதுபடிக்கு நாளொன்றுக்கு வீரராசேந்திரன் சந்தி ஒன்றுக்கு அரிசி நாநாழிக்கு விஞ்சனமுட்பட
2. ஒன்று மூன்றும் படி நெற் குறுணி நானாழியாக ஆண்டொன்றுக்கு நெல் நாற்பத்தைங்கலத்துக்கு மிட்ட பொந் குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வேட்டவூரில் பயிற்கான கற்துளை கழஞ்சும் தட்டார் பொந்துளை கழஞ்சும் கொல்லன் பொந் துளை கழஞ்சும் தச்சந் பொந்துளை முக்காலே மஞ்சாடியும் ஆகப்பொந்துளை முக்கழஞ்சேய் முக்காலே மஞ்சாடியும் ஆண்டு வரையு
3. ங்கொண்டு இவ்வமுதுபடி சந்திராதித்தவரை செல்விதாகச் செம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக் கொள்வார்களாக நம்மோலை குடுத்தோம் இத்தந்மம் நந்தம்மர் யெப்பேர் பட்டாரும் பாற்படுத்துக்குடுக்க இவை குலதீபமுடையார் வேளாநெழுத்து இவை சேதிராயநெழுத்து இவை தியாகவினோதநெழுத்து

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 7/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	6
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1262
ஊர்	:	பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	262/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
அரசன்	:	இரண்டாம் விக்கிரமசோழன்			
இடம்	:	பால்வண்ண ஈஸ்வரர் கோயில் தெற்குச் சுவர்.			
குறிப்புரை	:	சந்திவிளக்கு வைக்க ஒரு கழஞ்சு பொன் அளித்த செய்தி			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு ஆறாவது பெருமாள் முதலிகளில் கூத்தநியாள்வானான உதையசிங்கதேவனேன் பால்வெண்ணீசுரமுடையாற்கும் சந்தியா தீபத்துக்குக் குடுத்த பொன் கழஞ்சு யிக்
2. கோயிற்காணியுடைய சிவப்பிராமணரில் கூத்தன் கூத்தனுங் கடைக்குறிச்சி பால்வத்தானுமுடையானாண்டவனுந் தம்பிமாரு மிவ்வனைவோம் சந்திராதித்தவரை இத்திருவிளக்கிடக் கடவோங் குடங்கொண்
3. டு கோயிற் புகுவார் இது பன்மாயேசுர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 8/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	13
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1220
ஊர்	:	பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	263/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	8
அரசன்	:	வீரராசேந்திரன்			
இடம்	:	பால்வண்ண ஈஸ்வரர் கோயில் தெற்குச் சுவர்.			

குறிப்புரை : பட்டாலியில் உள்ள காவன் குறும்பிள்ளர் குலத்தைச் சார்ந்த கூத்தன் கூத்தனான வாழவந்தான் என்பவன் அமரபயங்கர சதுர்வேதிமங்கலத்து ஊரார் வசம் காசு கொடுத்து சிவராத்திரி திருநாள் தேவைக்கு வழிவகை செய்துள்ளான். இக்காசு வாயிலாக ஆண்டுதோறும் தூணி பதக்கு நெல் அளப்பதாக உறுதி அளித்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு ௰௩
2. நல்லூரான வலுப்புக்கா நாட்டு அமரபுயங்
3. கர சதுர்வேதிமங்கலத்துரோம் காங்கைய நாட்டிற் ப
4. ட்டாலியிற் காவன் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தநா
5. ன வாழவந்தானேந் நாயநார் பால்வெண்ணீசுரமுடையார்
6. க்கு சிவராத்திரைக்குப் பண்டாரத்தில் ஒடுக்கின அ . . .
7. ணரோம் கொண்டு ஆண்டுவரை அச்சிரயக்காணத்தாற் தூணி
8. ப்பதக்கு நெல் உபையமளந்து வருவோமாகவும் அளவாத நெல் இ
9. ரட்டிப்பதாகவும் இந்நெற்தண்டி வந்த ஆளுக்கு நாங்கள . . . .
10. ளே கண்டு கூலியும் பதக்கு நாழி நெல் குடுத்துச் சோறிட்டு(ங்)
11. காட்டுவோமாகவும் இப்படி சந்திரா . .

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 9/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	20
வட்டம்	: காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1293
ஊர்	: பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	264/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	9
அரசன்	: மூன்றாம் விக்கிரமசோழன்			
இடம்	: பால்வண்ண ஈஸ்வரர் கோயில் தெற்குச் சுவர்.			
குறிப்புரை	: இக்கோயில் சிவபிராமணர்கள் இரண்டு கழஞ்சு கொண்டு அமுதுபடி நித்தம் செய்வதாக ஒப்புக்கொண்டச் செய்தி.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு இருபதாவது பட்டாலி காவலன் குறும்பிள்ளரில் செ
2. சயங்கொண்ட வேளானும் செயங்கொண்ட வேளாந் மகந் பறையநும் இவ்இருவரும் பட்டாலியிற் பால்
3. வெண்ணீஶ்வமுடையாற்குச் சந்தியா தீபம் இரண்டுக்கும் குடுத்த பொந் இருகழஞ்சும் இக்கோயி
4. ல் காணிஉடைய சிவப்பிராமணந் கூத்தந் கூத்தனும் திருமழபாடியுடையாநான கடைக்குறிச்சியும் இருவோம் இப்
5. பொந் இருகழஞ்சுங் கொண்டு நித்தப்படி சந்திராதிச்சம் செலுத்துவோமாக இச்சந்தியாதீபம் கு
6. டமுங் குச்சியும் கொண்டு மிக்கோயில் புக்காந் இவ்விளக்கிடுவாநா வாந் . . . .

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 10/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	36
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1243
ஊர்	:	பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	261/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	10
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : பால்வண்ண ஈஸ்வரர் கோயில் மேற்குச் சுவர் குமுதம்.

குறிப்புரை : பட்டாலியூரார் அரசனுக்கு அளிக்க வேண்டிய 40 அச்சு இறை(வரி) அமுதுபடிக்காக நெல் அளப்பதாகச் கூறிய செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திரதேவற்கு யாண்டிருபத்தொன்கதாவதற்கெதிரேழாவது பட்டாலியூரோம் எங்கள் நாயனார் பால்வெண்ணீஶ்வரமுடையார் ஸ்ரீபண்டாரத்தில் பெருமாள் இறைக்கு வாங்கியிட்ட அச்சு நாற்பதுக்கும் பண்ணால் முக்குறுணி கண்பு நாலுவாய
2. லுக்குட்பட்டாரெல்லாம் அமுதுபடிக்கு அளப்போமாகவும் இது சந்திராத்தவற் செல்வதாகக் கல்வெட்டி குடுத்தோம் ஊரோம் பால்வெண்ணீஶ்வரமுடையாற்கு பொந்னாடு நாழியால் அளப்போமாகவும் மண்கலம் தகத்தும் வெண்கலம் பறித்தும் கொள்வாராவும் பன்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 11/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	8
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1215
ஊர்	:	பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	265/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	11
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : பால்வெண்ணீஸ்வரமுடையார் கோயில் கருவறை மேற்குச் சுவர் குமுதம்.

குறிப்புரை : சோழாண்டி என்பவள் சந்திவிளக்கு வைக்க பொன் ஒரு கழஞ்சு வைத்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந் . . . ற்கு யாண்டு நாலாவதற்கெதிர் நாலாவது காங்கய நாட்டிற் காடவூரி
2. ற் காவலன் வளவரில் . . . . னைக்கிழத்தி சோழாண்டியேந் பட்டாலியிற் பால்வெண்ணீசுரமுடைய
3. யார் கோயிலுக்குச் சந்தி . . . ஒன்றுக்கு நான்குடுத்த பொன்கழஞ்சு இப்பொந் கழஞ்சும் இக்கோயில் க
4. ாணி உடைய சிவப்பி . . . கூத்தந் ஆரம்பூண்டியும் கூத்தந் கூத்தனும் இவ்விருவர் செம்பாதியும் திரும
5. ழு உடையான் கடைக் . . . செம்பாதியும் கைக்கொண்டு சந்திராதித்தவரை நித்தப்படி செலு
6. த்தோவோமாகவும் இது . . . ஹேமஸ்ர ரகைக்ஷ

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 12/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	9
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1158
ஊர்	:	பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	266/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	12
அரசன்	:	முதலாம் குலோத்துங்கன்			

இடம் : பால்வண்ண ஈஸ்வரர் கோயில் தெற்குப் பக்க நுழைவாயில் கால்.

குறிப்புரை : பட்டாலியைச் சேர்ந்த கூத்தன் கூத்தன் என்பவன் மண்டபம் கட்டிய செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ குலே
2. லாத்துங்க சோ
3. ழ தேவர்க்கு ய
4. ாண்டு ஒன்ப
5. தாவது இத்
6. திருமண்டப
7. ஞ் செய்வித்
8. தேன் பட்ட
9. ாலியில்லிரு
10. க்குங் காவல
11. ன் குறும்பிள்
12. ளரில் கூத்தன்
13. கூத்தனான அ
14. தியமானே
15. ன் பால்வெ
16. ண்ணீசுரம்
17. முடையாற்கு

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 13/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	18
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1225
ஊர்	:	பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	267/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	13
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : பால்வண்ண ஈஸ்வரர் கோயில் மகாமண்டபம் கிழக்கு மற்றும் வடக்குக் குமுதம்.

குறிப்புரை : பட்டாலி ஊரைச் சார்ந்த மாதவராயத் தவசி என்பவன் சந்தியாதீபம் ஒன்றுக்கு ஒரு கழஞ்சு கொடையளித்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு ௰அ வது பட்டாலியில் மாதவராயத் தவசியேன் பால்வெண்ணீசுவர
2. முடையார் கோயிலுக்குச் சந்தியாதீபம் ஒன்றுக்கும் நான் குடுத்த பொன்கழஞ்சும் இக்கோயில்காணியு
3. டைய சிவப்பிராமணந் கூத்தன் ஆரம்பூண்டியும் நம்பிகடைக்குறிச்சியும் பொந் கைக்கொண்டு இவி
4. ளக்கு ஒந்றும் சந்திராதிச்சவரை செலுத்துவோம் இக்கோயில் குடமுங் குச்சியுங் கொண்டு புகுவார்
5. திருவிளக்கெரிப்பாராக இது பன்மாஹேஶ்வர ரக்ஷை(॥)

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 14/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	19
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1292
ஊர்	:	பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	268/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	14
அரசன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			
இடம்	:	பால்வண்ண ஈஸ்வரர் மண்டபம் வடக்குச் சுவர் குமுதம்.			
குறிப்புரை	:	இவ்வூரில் காவலன் குறும்பிள்ளர் குலத்தைச் சார்ந்த அதியமான் மனைவியும் அவனது மகன்கள் இக்கோயில் மகாமண்டபம் கட்டிய செய்தி.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு பத்தொன்பதாவது பட்டாலியிற் காவலன் குறும்பிள்ளரில் நாயநார் பால்வெ
2. ண்ணீசுரமுடையார்க்கு இத்திருமண்டகம் அதியமான் மனைக்கிழத்
3. தியும் மகன் வீராந்தப்பல்லவரையனும் மகன் வீர

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 15/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	: 19
வட்டம்	: காங்கேயம்	வரலாற்று ஆண்டு	: கிபி. 1292
ஊர்	: பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 270/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 15
அரசன்	: மூன்றாம் விக்கிரமசோழன்		

இடம் : பால்வண்ண ஈஸ்வரர் மண்டபம் கிழக்குச் சுவர் குமுதம்.

குறிப்புரை : பட்டாலி ஊர் அகளங்காழ்வான் மனைவி அவிநாசியாண்டி என்பவள் சந்திவிளக்கெரிக்க ஒரு கழஞ்சு பொன் அளித்தச் செய்தி

கல்வெட்டு :

1. விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு பத்தொன்பதாவது பட்டாலியிற் காவலன் குறும்பிள்ளரில்
2. கூத்தன் கூத்தனாந அகளங்காழ்வாந் மனைக்கிழத்தி அவிநாசியாண்டியேந் . . . பட்டாலியிற் பால்வெண்
3. ணீசுரமுடையாற்கு சந்தியாதீபம் ஒன்றுக்குங் குடுத்த பொன் கழஞ்சு இக்கோயில் காணி உடைய
4. சிவப்பிராமணன் கூத்தன் கூத்தனும் திருமழபாடி உடையாந் கடைக்குறிச்சியும் இவ்விருவோம்
5. பொன் கழஞ்சுங் கொண்டு நித்தபடி சந்திராதித்தவரை செலுத்துவோமாக இச்சந்தியாதீபம் குடமுங் . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 16/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	: 19
வட்டம்	: காங்கேயம்	வரலாற்று ஆண்டு	: கிபி 1292
ஊர்	: பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 269/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 16
அரசன்	: மூன்றாம் விக்கிரமசோழன்		

இடம் : பால்வண்ண ஈஸ்வரர் கோயில் மண்டபம் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : சோனப் பல்லவரையன் மனைவி ஒரு சந்திவிளக்கெரிக்க பொன் கழஞ்சு கொடை கொடுத்த செய்தி

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு பத்தொன்பதாவது வீரகேரளத்த வெண்சோன
2. ரில் சோனர்ப் பல்லவரையந் மநைக்கிழத்தி சேங்கூத்தா . . . . பட்டாலியிற் பால்வெண்ணீ
3. சுரமுடையார்க்குச் சந்தியாதீபம் ஒந்றுக்கும் குடுத்த பொன் . . . இக்கோயில் காணி
4. உடைய சிவப்பிராமணந் கூத்தந் கூத்தநும் திருமழபாடி கடைக்குறிச்சியும் இவ்விருவோம்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 17/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	: காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1285
ஊர்	: பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	271/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	17
அரசன்	: மூன்றாம் விக்கிரமசோழன்			

இடம் : பால்வண்ண ஈஸ்வரர் கோயில் காலபைரவர் கோயில் வடக்குக் குமுதம்

குறிப்புரை : சந்திவிளக்கெரிக்க ஒரு கழஞ்சு பொந் கொடை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு பன்னிரண்டாவது காங்கய நாட்டு பட்டாலியிற் காவலன் குறும்பிள்ளரில் போடன் மனைக்கிழத்தி கோவி . . . நாயனார் பால்வெண்ணீசுரமுடையாற்குச் சந்தியாதீபமொ
2. ன்றுக்கு ஒடுக்கின பொன் கழஞ்சுக்கும் கோயிற் காணியுடைய சிவப்பிராமணரில் கடைக்குறிச்சி பால்வணத்தானுமுடையான் ஆண்டவனுமுள்ளிட்டாரும் கூத்தநல்லானுள்ளிட்டாரும் இவ்வனைவோம் சந்தியாதீபம் சந்திராதித்தவரை செலுத்தக்கட
3. வோமாகவும் இது பன்மாஹேஸ்வரரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 18/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	கலி 4894
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1793
ஊர்	:	பட்டாலி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	272/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	18
அரசன்	:	–			

இடம் : கோயில் தோட்டத்தில் உள்ள கல்.

குறிப்புரை : கல்வெட்டு முழுமை பெறாமல் உள்ளது. தீர்த்தகிரி உத்தமகாமிண்டன் பெயர் குறிக்கப் பெறுகின்றது. கவுண்டம்பாளையக் கல்வெட்டிலும் இவன் நிலக் கொடையளித்துச் செய்தியுள்ளது.

கல்வெட்டு :

1. சொவத்தி ஸ்ரீமன் விசையாப்பு
2. தைய கலியுக சகாத்தம் சகூஅா
3. கூயிசு சாலிவாகன சகாத்தம் கூ
4. எா யிரு க்கு மேல் செல்லாநின்ற பி
5. ரமாதிட்ச ஷ சித்திரை மீ க தேதி யி
6. . . . தீர்த்தகிரி சக்கரை உத்தம காமி
7. ண்ட மன்னாடியார் ப . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 19/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	சகம் 1630
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1708
ஊர்	:	வட்டமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	281/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	நாயக்கர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	சொக்கநாத நாயக்கர்			
இடம்	:	வட்ட மலையிலுள்ள ஒரு பாறை.			

குறிப்புரை : வட்டமலை வேலாயுதசாமிக்கு நிலக்கொடை அளித்த செய்தி. வடக்குக் கரை, ராசவாய்க்கல், பன்றி வடிக்கரை அமராபதி, காங்கய மண்ணாடியார் ஆகிய பெயர்கள் குறிப்பிடத்தக்கவை.

கல்வெட்டு :

1. சுவத்தி சிரிமன் மகாமண்டலேசுரன்
2. விசையரங்க முத்துகிட்டிண சொ
3. க்கனாத னாயக்கரய்யனவர்கள் கா
4. ரியத்தக்கு கற்த்தரான வே .
5. ங்கி மீனாட்சி னாயக்கனவர்
6. கள் காறியத்துக்குக்
7. கற்த்தரான வெங்கியழ
8. கிரி னாயக்கரவர்கள் கா
9. ங்கயனாட்டில் ராச்சி
10. யம்பண்ணி அருளாநின்ற கலியுக சகார்த்த சகூஅாக

11. சாலிவாகன சகார்த்தம் ௲௬௱௰௩ செல்லாநின்ற

12. சர்வதாரி ௵ சித்திரை ௴ எ உ ஆதித்த வாரமும் அஸ்த்த நட்ச

13. த்திர தசமியும் பெற்ற னாளில் சிங்க லக்கணத்தில் . . . . . .

14. சின்னக்காடையூர் வட்டமலை வேலாயுத சுவாமி

15. யாருக்கு சிலாசாதனம் மானியம் குடுத்தபடி மலைக்

16. கு வடபாரிசத்தில் தெற்கு சாழக்கிறாம தீர்த்தத்துக்கு

17. கிழக்கு வடக்குக் கரைக்கு தெற்கு ராசவாய்க்காலுக்கு

18. மேற்கு தெற்கு பன்றி வடிக்கரை நிலத்தில் னால் பாங்கு முள்பட்ட . . .

19. ரண்டு மானிலத்து விதைப்பாடுமிடா வேங்கி அளகிரி னாய

20. க்கரவர்கள் அமராபதி காங்கயன் மண்ணாடியார் நா

21. ளையில் மிந்த தந்மம் பரிபாலனம் பண்ணி நடப்பிச்சு கொள்

22. ளவும் மிந்த தர்மத்தை யாதொமொருவர் அகிதம் பண்

23. ணின பேர்கள் கெங்கைக் கரையில் கோகத்தி பண்ணின தோஷத்தில்

24. தீர்த்தக் கரையில் பிறுமக்ததி பண்ணின தோஷத்தில் பிராமணரை வதை பண்

25. ண்ணின தோஷத்தில் போவாராகவும் மிந்த தற்ம

26. த்துக்கு யாதாமொருவர் வுண்டகத்து

27. கொண்ட பேர்கள் சந்தான சம்பத்தையும் அஷ்டஅசுவரி

28. யமுண்டாமி வட்டமலை வேலாயுதசாமி ஆசி பெறுவார்

29. வேங்கி மீனாட்சி னாயக்கரவர்கள்

30. . . . . . . குமரன் சின்னகாடையூர் மணியம்

31. இராமநாதபிள்ளை கணக்கு வேங்கிடபதி

32. முதலியார் மிவர்கள் நாளையில்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 20/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	13
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி.1286
ஊர்	:	கண்ணபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	224/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			

இடம் : விக்ரமசோழீஸ்வரர் கோயில் சுப்ரமணிய சுவாமி சன்னதி வடக்குச் சுவர்

குறிப்புரை : காங்கேய நாட்டு வல்லவன் மாதேவி எனும் விக்கிரமசோழபுரத்தில் இருக்கும் வியாபாரி பெருமாள் பொன்னன் என்பவன் முருகனின் தேவியரான வள்ளி தெய்வானை உருவங்களை கோயிலில் பிரதிட்டை செய்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கிரம சோழதே
2. தவற்கு திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருநல்லியாண்டு ய
3. ந ஆவது காங்கய நாட்டு வில்லவன் மாதேவியான வி
4. க்கிரமசோழபுர நகரத்திலிருக்கும் வியாபாரி பெருமாள்
5. பொன்னநேன் குன்றமெறிஞ்ச பிள்ளையாற்கு தம்பிராட்டி
6. மார் யிருவரையும் எழுந்தருளுவிச்சுக் குடுத்தேன் பெ
7. பருமாள் பொன்னநேந்

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 21/2010

மாவட்டம் : திருப்பூர்		ஆட்சி ஆண்டு	: 3
வட்டம் : காங்கேயம்		வரலாற்று ஆண்டு	: கி.பி. 1088
ஊர் : கண்ணபுரம்		இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 223/1920
மொழி : தமிழ்		முன் பதிப்பு	: –
எழுத்து : தமிழ்			
அரசு : கொங்குச் சோழர்		ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன் : அபிமான சோழ ராஜாதிராஜன்			

இடம் : விக்ரமசோழீஸ்வரர் கோமில் நித்யசெல்வி அம்மன் சன்னதி தெற்குச் சுவர்

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு, விக்கிரமசோழபுரம், விக்கிரம சோழிஶ்வரமுடையார் ஆகிய பெயர்கள் குறிக்கப் பெறுகின்றன. அரையன் சோமன் என்பவன் மடத்தில் உணவளிக்க ஏற்பாடு செய்துள்ளான்.

கல்வெட்டு :

1. . . . . ஊந ஸ்ரீ ராஜாதி ராஜதேவர்க்கு திருவெழுத்தி . . . . .
2. . . . . நல்லியாண்டு மூந்றாவது காங்கய நாட்டு வி .
3. . . . . . ரம சோழபுரத்து ஸ்ரீவிக்கிரமசோழீஶ்வர உடையா
4. . . . . . . பாரி நகரக்குடையாந் அரையந் சோமநேந் உடை
5. . . . . . . நாள் ஒன்பதுக்கும் மடம் முடைய ஸ்ரீஊயேஶ்வரர்க்கு
6. . . . . கொண்டு

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 22/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	5
வட்டம்	: காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி.1212
ஊர்	: கண்ணபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	222/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	: வீரராசேந்திரன்			

இடம் : விக்ரமசோழீஸ்வரர் கோயில் வடக்கு மற்றும் மேற்குச் சுவர்

குறிப்புரை : வீரராஜேந்திரன் ஆட்சியாண்டுடன் முடிந்து விடுகின்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்த்ர தேவற்கு யாண்டு
2. ஐந்சாவது ஆளுடையார் விக்கிரம சோழீஸ்வரமுடையா . . .

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 23/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	: 17
வட்டம்	: காங்கேயம்	வரலாற்று ஆண்டு	: கி.பி.1224
ஊர்	: கண்ணபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 221/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 4
அரசன்	: வீரராசேந்திரன்		
இடம்	: விக்ரமசோழீஸ்வரர் கோயில் தெற்குச் சுவர்		
குறிப்புரை	: தைப்பூச விழாவிற்குக் கொடை அளித்தச் செய்தி.		

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்த்ரநேன் நமக்குச் செல்லாநின்ற யாண்டு பதிநேழா . . .. ரத்து ஆளுடை
2. யார் விக்கிரமசோழீஸ்வரமுடைய நாயநாற்கு பொங்கலூற்க் . . . . ன்றாக தைபூச
3. . . . . . க . . . எழுந்தருளக் கொடுத்தோம் இறை பு . . . ற்றாயம் எலவை யுக . . . அச்சோடொத்த . . . .

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 24/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	15+1+1+1
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1225
ஊர்	:	கண்ணபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	220/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : விக்கிரம சோழீஸ்வரர் கோயில் தெற்குச் சுவர்

குறிப்புரை : வில்லவன் மாதேவியான விக்கிரமசோழபுரத்து வியாபாரி குளத்தூருடையான் என்பவன் சந்தி விளக்கெரிக்க ஓர் அச்சு கொடை அளித்துள்ளான். பதினெண்பூமி சபை பற்றி குறிக்கப் பெறுகின்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு பதி
2. நஞ்சாவதற் கெதிராவதற் கெதிராவதற் கெதிராவ
3. து ஆளுடையார் விக்கிரம சோழீசுரமுடையாற்கு
4. சந்தியாதீபம் விளக்கொன்றுக்கு வில்லவந் மாதே
5. வியான விக்கிரம சோழபுரத்து வியாபாரி குளத்தூ
6. ருடையாந் நமசிவாயதெதெ . . . படா . . . தேவனா
7. ன பதிநெண்பூமிச் சபை . . . நட . . . இக் கோயி
8. ல் காணியுடைய சிவப்பிராமணன் விக்கிரம சோழ பட்டநே
9. ந் இவ்வச்சொன்றுங் கொ . . . இவ்விளக்கொன்றும்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 25/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	17
வட்டம்	: காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1223
ஊர்	: கண்ணபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	218/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
அரசன்	: வீரராசேந்திரன்			

இடம் : விக்ரமசோழீஸ்வரமுடையார் கோயில் கருவறை வடக்குச் சுவர்

குறிப்புரை : வாணிகர்கள், தேவரடியார் ஏர் கட்டி உழும் உழவர் ஆகியோர் தரும் ஒட்டிறை என்ற வரியை இரண்டு பாகமாகப் பிரித்து ஒரு பாகம் கோயிலுக்கும், ஒரு பாகம் திருமுற்றமுடையாவர்களுக்கும் தர வேண்டும் என்று அரசன் ஆணையிட்டுள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திரதேந் நமக்குச் செல்லா நின்ற யாண்டு பதினைஞ்சாவதற் கெதிராவதற் கெதிராவது சோழபுரத்து நகரத்தாற்கும் விக்கிரமசோழபுரத்து
2. நகரத்தாற்கும் நம் ஓலை கொடுத்தபடியாவது தங்களூர் ஆளுடையார் . . ரந்தாறி[ஸ்வ]வரமுடையா நாயநா . . . . அபிமான சோழீஸ்வரமுடைய நாய நாற்கும் ஆ[ளு]
3. டையார் விக்கிரமசோழீஸ்வரமுடைய நாயநாற்கும் இரண்டு நகரத்தி . . . ம் . . . . தெற்கும் அமிர்துபடி தட்டு . . . . தீர்த்து தர வேண்டும் என்று நமக்கு . . . .
4. யில் இன்னகரங்களில் வியாபாரிகளும் இவர்கள் மனிச்சரும் பதினைஞ்சாவதற் கெதிராவதற் கெதிராவதற்கும் . . . . ருக்கிற தேவரடியார் மக்களும் ஏர் கட்டி உழுதவர்கள் முந்நாள் ஒட்டிறை இறுக்கும்

5. . . . பாக உள்ள பொந் இரண்டு கூறிட்டு அபிமாந சோழபுரத் தேவர்களும் திருமுற்றமும் ஒரு கூறு கொள்வதாகவும் நம

6. க்கு பதினைஞ்சாவதற் கெதிராவது ஆண்டு வரைதோறும் இக்கோயில்களில் தேவர்கந்மிகள் வசம் இறுத்து வருவதாகவும் இப்படிக்குச் சந்திராதித்தவரை செல்வதாக நம்மோலை கொடுத்தோம் நந்

7. தமர் எப்பேர்ப்பட்டாரும் இத்தந்மம் பாற்படுத்துக்கொடுக்க இத்தந்மம் பன்மாஹேச*ஸ்வர ரசைக்ஷ* உ இவை எல்லாம்வல்ல சோழமூவேந்த வேளாந் எழுத்து உ இவை வாணராய தேவந் எழுத்து உ இவை

8. தியாகவிநோதந் எழுத்து உ இவை முனையதரையந் எழுத்து உ இவை சேதிராயதேவந் எழுத்து உ இவை காடுவெட்டி எழுத்து உ இவை களப்பாளராயந் எழுத்து உ இவை சிங்கதேவந் எழுத்து உ

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	16
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1223
ஊர்	:	கண்ணபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	219/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : விக்கிரமசோழீஸ்வரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்

குறிப்புரை : விக்கிரமசோழீசுரமுடைய நாயனார் கோயில் சந்தியாதீபத்துக்கு அச்சு கொடை அளித்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திரதேவற்கு யாண்
2. டு பதினைஞ்சாவதற் கெதிராவது கோயில் ஸ்ரீ
3. காரியஞ் செய்வார்களில் தேவர்க்கு . . . . பாடுபெ
4. ம்மாந் புகழ் வேண்டியாந் முனையதரையனு
5. ம் விளத்தூர் கிழவந் வீரநாயகத்தில்லையான
6. தியாகவினோததேவனும் ஆளுடையார் வி
7. க்கிரம சோழீசுரமுடைய நாயநாற்குச் சந்தியா
8. தீபத்துக்கு இட்ட அச்சு ஒந்று சந்திராதித்த
9. வரை செல்வதாகவும் இவை பன்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 27/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	கலி ஆண்டு 4894
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1793
ஊர்	:	கவுண்டம்பாளையம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	291/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	-	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	-			

இடம் : விநாயகர் கோயில் முன்னுள்ள பலகைக் கல்.

குறிப்புரை : உத்தமகாமிண்ட மன்றாடியார் சிவன்மலை உச்சிகால வழிபாட்டிற்காக காடயூர் கிராமத்திலுள்ள 15 வள்ள விதை நிலம் கொடை அளித்த செய்தி.

கல்வெட்டு :

1. சுவத்திஸ்ரீ விசையாற் புதைய
2. கலியுக சகாற்தம் சஈஅாசூயிச சாலி
3. யவாகன சகாற்தம் ஆளாயிரு மேல் செ
4. ல்லாநின்ற பிறமாதிட்ச ஹு சித்திரை மீ
5. தில் தீர்த்தகிரிச் சக்கரை உத்தமக்காமிண்ட ம
6. ன்றாடியாரவர்கள் அதிகாரத்தில் சிவன்ம
7. லை ஆண்டவருக்கு உச்சிக்காலக் கட்டளைக்கு
8. காடயூர் கிறாமத்தில் மானியம் விட்ட விப
9. ரம் கவுண்டம்பாளையத்துக்குத் தெற் . .
10. போத்தியாபாளையத்து பால . . .
11. க்கு மேற்கு ராசா வலசுக்கு வடக்கு வே
12. லாங்காடுக்கும் கிளக்கு யிந்த சதிரபத்

13. தியில் . . . . . .

14. யிந்த பதினஞ்சு வள்

15. ளக்காடும் சந்திராறகுள்ள

16. வரை போகத்திலே யிருப்பராகவு

17. யிததற்கு விகாரம் பண்ணின

18. வன் கெங்கை கரையில் காராம்பசுவை

19. க்கொன்ற தோஷத்திலேயும்

20. . . .

21. போந்த பேராயு

22. யேன் உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 28/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1899
ஊர்	:	சிவன்மலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	–			

இடம் : சிவன்மலை மலைக்கோயில் நுழைவாயில் மண்டபத்தின் அடிப்புறச் சுவர்.

குறிப்புரை : சர்க்கரை மரபில் வந்த தீர்த்த கவுண்டர் செய்த திருப்பணி செய்தி.

கல்வெட்டு :

1. கலியுக சகாப்த்தம் 5000க்கு
2. விளம்பி வருஷம் ஆவணி மாதம்
3. 1–ந் தேதி பழையகோட்டை தீர்த்தகிரிச்
4. சர்க்கரை சந்தததி வாழத்தோட்டத்து
5. வலசு ரங்கசாமிக் கவுண்டர் வத்
6. திறத்தா கவுண்டர் ஜீரன
7. உத்தாரணம் உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 29/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1858
ஊர்	:	சிவன்மலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	:	–			

இடம் : அருளாடி மடம் வடக்குச் சுவர்.

குறிப்புரை : பழைய கோட்டை மரபில் வந்த சர்க்கரை உத்தம கவுண்டர் மன்றாடியார் செய்த திருப்பணி பற்றிய செய்தி.

கல்வெட்டு :

1. கலியுக 4959 பிங்கள வருஷம் கார்த்திகை
2. மாதம் 30 தேதி பழைய கோட்டை நல்ல சே
3. னாபதிச் சர்க்கரை உத்தம காமிண்ட மன்றா
4. டியார் பௌத்ரன் நல்லதம்பிச் சர்க்கரை உத்
5. தமக்காமிண்ட மன்றாடியார் புத்ரன் கொற்ற
6. வேல் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடி
7. யார் உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 30/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	சகம் 1449
வட்டம்	: காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1527
ஊர்	: காடையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	290/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: விஜயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	: கிருஷ்ணதேவராயர்			

இடம் : காடேஸ்வரர் கோயிலுக்கு முன்னுள்ள வயலில் உள்ள பலகைக் கல்

குறிப்புரை : காடவூர் அப்பர் (காடேஸ்வரர்) தான்தோன்றியப்பர் ஆகிய கோயில்களுக்கு தேவதானமாக சிறுகாடவூரை அளித்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ உரு உஹா
2. மண்டலேஸ்வுர
3. ஸ்ரீவீரகிஷ்ணதேவஉ
4. ஹாரரயர் பெரிய
5. புத்துக்குக் கடவ
6. தான கொண்ட
7. மரசர் காரியத்து
8. வாலைய தேவ ம
9. காராசாவுக்கு செ
10. ல்லாநின்ற சகார்த்
11. தம் ௲சாசயசௌ இ
12. திற் செல்லும் கலி
13. யுக வருஷம் ச௲கூா
14. உயஅ க்கு மேற்செ
15. ல்லா நின்ற சறுவ
16. சி வருஷம் வையாசி
17. மாதம் கூ வ திங்கட்
18. கிழமை மேனாட் பூ
19. சம் பக்கம் சட்டியு
20. பெற்ற நாழ் காங்

21. கேய நாட்டுக் காட
22. வூரவரோந் தம்பி
23. ரானார் காடவூர
24. ப்பற்கும் தாந்தே
25. ரன்றியப்பற்கும்
26. சிலைசாத
27. னம் பண்
28. ணிக் குடு
29. தபடி சிறு
30. க்காடவூர்
31. ர் நாற்பா
32. ங்கெல்
33. லைக்குட்ப
34. ட்ட இவை
35. நடப்பதா
36. கவுங் காட
37. வூற்கு மே
38. ற்குப் பெரி
39. யகுளம் தெ
40. ற்கு . . . .
41. க்குளம் வள
42. வநல்லூற்
43. கு மேற்கு அ
44. ணையும் கி
45. ழக்கு அணை
46. யும் இவற்றி
47. ன் கீழ்நஞ்
48. சைமிற் பமிற்
49. போகந்த
50. ம் பிரானாற்கு
51. ஒரு பாகமு
52. ம் பயிற் செய்
53. தவர்களுக்கு
54. இரண்டு
55. பாகமும் ச
56. ச்திராதித்த
57. வரையும் நடப்
58. பதாகவும்
59. இதை நடத்
60. தினவர்களு
61. க்குச் சகல ச
62. ம்பத்துண்
63. டாகவும் இ
64. தை விகிதம்
65. பண்ணினவ
66. ர்கள் வறும

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 31/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	காடையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			
இடம்	:	காடேஸ்வரர் கோயில் தெற்குச் சுவர்.			
குறிப்புரை	:	விளக்கு வைக்க ஓர் அச்சு கொடையளித்த செய்தி.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கரமசோழ தேவற்கு யாண் . . .
2. வேளான் பிள்ளையாநாந கொங்கு வா . . .
3. விளக்கிற்கு ஒடுக்கிந அச்சு ஒன்றும் இக்கோயில் காணியுடைய . . .
4. திருஞாநசம்பந்தந் உள்ளிட்டோங் கைகொண்டு விளக்கு . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 32/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	: காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	13–ஆம் நூற்றாண்டு
ஊர்	: காடையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	188/1965–66
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	: –			

இடம் : துண்டுக் கல்வெட்டுகள்.

குறிப்புரை : சிவன் கோயில் கட்டப்பெற்ற துண்டுக் கல்வெட்டு.

கல்வெட்டு :

I 1. டு . . . . ண்ண மூவு . பட்ட பிடங்களும் திருமடைப்

4. பள்ளியும் தின்மானியத் தோட்ட மு . . . . . கொடுந்தேந்

II 1. . . . . . . தேவற்கு யாண்டு

2. . . . . இவ்வூர் தநர் . . . . .

3. கோயிற் காணியுடைய சிவப்பிராமண . . . . . .

4. . . . . க . . ப் போமானோம் இப்படி . . . . கோயில் குட

5. . . . . . . ள்ளி . . . றைத்

6. . . . . . . ங்கொண்டு விளக்கெரிப்பார

7. ாகவும் . . . . . புகுவாந்

8. . . . . ாக பந்மாஹேஶ்வர ரகைக்ஷ

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 33/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	காடையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	189/1965–66
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
அரசன்	:	–			

இடம் : சிவன் கோயில் துண்டுக் கல்வெட்டு.

குறிப்புரை : சிதைந்த கல்வெட்டுகள். விளக்கெரிக்க கொடை.

கல்வெட்டு :

1. . . . . தேவற்கு . . . . .
2. . . . . . நாயநார் ஆளுடையார் காடயூரில் நாயநாற்கு சந்தியாதீபம்
3. . . . ஆகம இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசிப கோத்திரத்தில்
4. . . . . ண்டு விளக்கெரிப்போமானோம் இக்கோயில்
5. சந்திராதித்தவரை செலுத்துவோமாக பந்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 34/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	5
வட்டம்	:	காங்கயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1173
ஊர்	:	காடையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	289/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
அரசன்	:	திரிபுவனவீரதேவன் (மூன்றாம் வீரசோழன்)			
இடம்	:	காடேஸ்வரர் கோயில் கருவறை தெற்குக் குமுதம்.			
குறிப்புரை	:	சந்திவிளக்கு வைக்க ஓர் அச்சு கொடை அளித்த செய்தி.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவன தேவற்கு . . . . . ச வதுக்கெதிராவது காங்கை
2. ய னாட்டு காடவூரிலிருக்கும் . . . . . ய . . . வைநேன் ஆளுடை
3. ார் காடைவூராண்டாற்கு சந்தியாதீபம் விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஒ
4. ன்றும் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணந் காசிவ கோத்திரத்து . . . சன்திராதித்த . . . .
5. . . . ஹேமஸ்வர ரகைக்ஷ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 35/2010**

மாவட்டம் : திருப்பூர்

வட்டம் : காங்கேயம்

ஊர் : ஆறுதொழுவு

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : –

அரசன் : –

ஆட்சி ஆண்டு : சகம் 1675

வரலாற்று ஆண்டு : கி.பி. 1753

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 287/1920

முன் பதிப்பு : –

ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : வரதராஜ பெருமாள் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : ஆறுதொழு வரதராசர் பெருமாள் கோயில் கட்டிய செய்தி.

கல்வெட்டு :

1. சொஸ்திஸ்ரீமன் சாலிவாகன சகாஎயரு கலியுகம்
2. சகூஆருயசு ஸ்ரீமுக ஷ மாசி மீ யசு மடவிளாகம் பர
3. ஞ்சேர்சாமியார் ஊர் ஆளுந்தொழு வரதராச பெருமாள்
4. சன்னதி கட்டிவிச்ச தலத்துக்கணக்கு தென் சொள்
5. ளி பிறாமணரில் பச்சொட்டு அய்யன் மகன் சுப்பையன் மகன்
1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநசக்கரவத்தி கோனேரின்மை கொண்டான் நறையனூர் நாட்டு வருஷேயம் வீரபாண்டிய
2. வதுவெ³திமங்கலத்தில் காலிங்கராயர் நம்பேரால் உகந்தருளப் பண்ணின சுந்தரபாண்டிய விண்ணகரெம் கோயில் ஸ்ரீவை
3. ஷ்ணவர்களுக்கும் நம்பிமார்க்கும் இந்நாட்டுப் பிராந்தகபுரமான இராசராசபுரத்து ஊரவர் பக்கல் இந்நாட்டு வீரபாண்டிய ச
4. துவெ³திமங்கலத்தில் ப்ராஹ்மணரில் பூசாரி ஸ்ரீக்ருஷ்ணபட்டன் பேரால் காலிங்கராயர் அவர்கள் பக்கல் விலை கொண்ட தெ
5. ன்புலத்தில் காரொரு . . ன நிலத்தில் இராசகெம்பீரச் சிலை செட்டி தலையெருமைப்பட்டி பலதடியினால் விதை ஐ
6. ங்கலனே காணியும் சந்திரபாலன் மேற்படிபல தடியினால் விதை இரு கலமும் பூமிபாலன் மேற்படி பலதடியினால் விதை இருகலமும் ஆக விதை ஒன்பதின் கலனே தூணி

7. யும் களப்பாளன் பக்கல் கைக்கோளரில் அவினாசி ஆட்கொன்டான் விலை கொண்டு இவன் பக்கல் இநாட்டு நரையனூர் பிராமணரில் காராம்பிச்சேட்டு புள்ளூரந் தான் விலை கொண்டு இவன் பக்கல்

8. காலிங்கராயந் விலைகொண்ட இப்புலத்துக் குரங்கன் விதைகலனே காணிஆக விதை கலனே தூணியும் ஏற்றச்சுருக்கமுட்பட இவர்கள் அனுபவித்தபடியிலே

9. இந்நிலத்தால் (வரு)ங்கடமை அந்தராயம் (ஒ)ட்டச்சு ஆராட்சி நத்தவரி காணிக்கை வேண்டுகோள் மண்டல முதல்மைப்பேறு சந்தி விக்கிரகப்பேறு முதலெழுத்து

10. வினியோகம் காலிங்கராயன் வினியோகம் கொண்டது முதல் வெட்டிவரி காவல் கூலி ஊர்வினியோகம் மற்றுமெப்பேற்பட்ட ஸஉஸ்த வரிகளும் இருபத்தாறாவது முத

11. ல் திருவிடையாட்ட இறையிலியாகத் தந்தோம்

12. இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு சந்

13. திராதித்தவற் செல்வதாக கல்லிலும் செம்

14. பிலும் வெட்டிக் கொண்டு அனுபவிக்க

15. . . . ழுதிய தரையனெழுத்து யாண்டு உ௰சு

16. வது ௱௩௰௫ காரையிருக்கைச் சிறுமா

17. றநல்லூர் அரைய

18. னழகனான வாணாதி

19. ராயனெழுத்து

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 88/2010

மாவட்டம் : திருப்பூர்		ஆட்சி ஆண்டு	: 20
வட்டம் : தாராபுரம்		வரலாற்று ஆண்டு	: கி.பி. 1293
ஊர் : கோனாபுரம்		இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 137/1920
மொழி : தமிழ்		முன் பதிப்பு	: –
எழுத்து : தமிழ்			
அரசு : கொங்குச் சோழர்		ஊர்க் கல்வெட்டு எண்	: 4
அரசன் : மூன்றாம் விக்கிரமசோழன்			

இடம் : விஸ்வநாதசாமி கோயில் மகாமண்டபத் தூண்.

குறிப்புரை : கோமாரசிகாமணித் தட்டான் இட்ட உத்தரம் பற்றிய செய்தி.

கல்வெட்டு :

1. . . . [விக்*]கிரம சோழதேவர்க்கு யாண்டு உ௰ வது ஆளுடையார் திருமருதுடையார்க்கு கடற்றூர்
2. . . . . . [சோ]ழனான கோமார சிகாமணித் தட்டான் இட்ட உத்தரம்

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 89/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	30
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1303
ஊர்	:	கோனாபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	140/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
அரசன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			

இடம் : பெருமாள் கோயில் அர்த்தமண்டபம் உத்தரம்.

குறிப்புரை : வெள்ளாளன் புடவை வியாபாரி உதையாமாணிக்கச்சிலை செட்டி உத்தரம் கொடுத்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு ௩௰ வது கடற்றூர் வெள்ளாளன் ஊரனம்
2. . . . . . ன் உதையமாணிக்கச் சிலசெட்டி இட்ட உத்தரம் ஒன்று

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 90/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	20
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1293
ஊர்	: கோனாபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	138/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
அரசன்	: மூன்றாம் விக்கிரம சோழன்			
இடம்	: பெருமாள் கோயில் மடப்பள்ளி.			
குறிப்புரை	: சிவப்பாதசேகர மூவேந்த வேளான் உத்தரம் கொடுத்தச் செய்தி.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு உய வது கடற்றூர் சிவப்பிராமண . . .
2. . . . ஆழ்வானாந இடங்கை நாயக ஸட்டநேந் இட்ட உத்தரம்

த.நா.அ. தொல்லியல் துறை — தொடர் எண் :- 91/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	சடையம்பாளையம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	135/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	விசயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	வீரகம்பண உடையார்			

இடம் : நாகேசுவரசுவாமி நல்லமங்கை அம்மன் கோயில் முகமண்டபத் தூண்.

குறிப்புரை : குறையூர் நாகீசுரமுடையார் கோயில் துலுக்கர் (முகம்மதியர்) படையெடுப்பால் அழிந்தச் செய்தி. மீண்டும் இக்கோயில் புதிதாக கட்டப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரகம்பண்ண உடையா(ர்)க்குச் செல்லாநின்ற
2. (வ்ரு)ஊதிய வருஷத்து குறையூர் நாகீசுரமுடையார்
3. ஆவுடையார் துலுக்கர் வாணத்தில் இறங்கல்ப
4. (ட்டு) புதிதாகா ஸ்ரீஅறயா[ரா]சா

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 92/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14–ஆம் நூற்.
ஊர்	: சடையன்பாளையம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	136/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: விஜயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	: வீரகம்பணன்			

இடம் : அருள்மிகு நல்லம்மை கோயில்

குறிப்புரை : முகம்மதியர் படையெடுப்பால் வடுகப்பிள்ளையார் கோயில் அழிபட்டதை மறுபடியும் சீர்திருத்தி பிரதிட்டை செய்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] வீரகம்பண உடை
2. யார்க்கு செல்லாநின்ற விரோதிய
3. வருஷத்து குறை ஊரில் வடுகப
4. பிள்ளையார் துளுக்கர் வாண
5. த்தில் துன்படுகையில்
6. இந்த வீழ்வு தீர்வித்து ஏறிஅரு
7. ளப் பண்ணுவித்[தேன்] மேற்
8. படி வாவு

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 93/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	கலி. 4933 சகம் 1754
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1832
ஊர்	:	பொன்னிவாடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	141/1967-68
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	-	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	திருமலைசாமி			

இடம் : நிர்மலேசுவரர் கோயில் கணேசர் சன்னதிக்குத் தெற்குப் பக்கம் பாறை.

குறிப்புரை : வெள்ளாளக்கோவிலைச் சார்ந்த ஆந்தை குல புள்ளாக் கவுண்டன் செய்த திருப்பணி பற்றிய செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சங்குசக்கற திருமலைசுவாமி தேவற்கு
2. யாண்டு முதலாவது தென்பொங்கலூர்கா நாட்டில் நிர்மணியூரிலே நிர்மணி
3. யூற்சுவாமி மலையில் ஆலையம் சீர்ரமைத்தாறம் செய்தது ஸ்ரீமக சங்குசக்கறதிரு
4. மலைச்சுவாமி கிருபா கடாச்சத்திநாலே அனுக்கிரகம் பெற்ற பொன்னிவாடி கிராமம்
5. குசவலத்திலே யிருக்கும் வெள்ளகோவில் ஆந்தை குலாதி . . தாகிய புள்ளாக்கவுண்டன்
6. செய்த தற்மம் சாலிய வாகன சகாற்த்தத்தில் சூளாருயசு கலியுக சகாற்த்தம் சகூளாகூயரு
7. செல்லாநின்ற கர ஹு மார்கழி மீ உயசு வ வெள்ளிக்கிழமையும் அவுட்டநச்சதிரமும்
8. கூடிய சுபதினத்தில் புள்ளாக்கவுண்டன் யிந்தச் சிவ திருப்பணி சீர்ணஉத்தாற உபயம்
9. பெரிய பறி . . . ற் பண்டிதற்கு ஸஹஸ்ரரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 94/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 10–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	பொன்னிவாடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	269/1961–62
மொழி	:	தமிழ், சமஸ்கிருதம்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	வட்டெழுத்து, கிரந்தம்			
அரசு	:	சேரர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	:	கோக்கண்டன்இரவி			

இடம் : நிர்மலேஸ்வரர் கோயில் அருகில் உள்ள கிணற்றுப் படியில் உள்ளது.

குறிப்புரை : சந்திராதித்திய குலத்தைச் சார்ந்த கண்டன்இரவியின் பணியாள் களியங்கறையான் என்பவன் இக்கோயிலை எடுப்பித்தான் என்பதைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சந்த்ராதி
2. த்ய குலதிலகஸ்ய ஸா
3. ர்வபௌமஸ்ய ஸத்யவ்ரத
4. னாகிய கோக்கண்டனிரவி
5. அடியான் களியங்கறை
6. யான் எடுப்பித்த திருக்கோயி
7. ல்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 95/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	7
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1214
ஊர்	:	பொன்னிவாடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	272/1961-62
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : நிர்மஸேஸ்வரர் கோயில் விநாயகர் சன்னதி எதிரிலுள்ள பாறை.

குறிப்புரை : அரசு அதிகாரி (முதலி) பெருமாள் வாழவந்தான் என்றழைக்கப்படும் சோழப் பல்லவரையன் நிலக் கொடை கொடுத்த செய்தி. எல்லை கூறும்போது பல நிலங்களின் பெயர்கள் கூறப்பெறுகின்றன.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு ஏழாவ
2. து பொங்கலூற்கா நாட்டு நிர்மணியிலிருக்கும் முதலி
3. களில் பெருமாள் வாழவந்தானான அழகிய சோழப் பல்ல
4. வரையநேன் நிர்மணீஶ்வரமுடையாற்கு நான் இ
5. ட்ட நீர்நிலம் தெற்குத் தூம்புக்கு மேற்கு கள்ளிமங்கலத்துக்கு
6. வடக்கு பிடாரியார் காணிக்குக் கிழக்கும் ஊராழ்மை காணிக்
7. குத் தெற்கும் நான்கெல்லைக்குட்ப்பட்ட நிலம் தேவர்க்கு . . . இரு
8. ப்பிள்ளையாற்குக் காணியும் ஆக நெல் விதை ஒருமாமுக்காணி
9. யும் அமுதுபடிக்கிட்டுக் கல்வெட்டிக் குடுத்தேன் அழகிய
10. சோழப் பல்லவரையநேன் சந்த்ராதித்த வரை செல்வதாக பன்
11. ஊயேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 96/2010

மாவட்டம் : திருப்பூர்

ஆட்சி ஆண்டு : 3

வட்டம் : தாராபுரம்

வரலாற்று ஆண்டு : கி.பி. 1276

ஊர் : பொன்னிவாடி

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 274/1961-62

மொழி : தமிழ்

முன் பதிப்பு : -

எழுத்து : தமிழ்

அரசு : கொங்குச் சோழர்

ஊர்க் கல்வெட்டு எண் : 4

அரசன் : மூன்றாம் விக்கிரமசோழன்

இடம் : பெரிய அம்மன் கோயில் கருவறை தெற்குக் குமுதம்.

குறிப்புரை : அரசன் நிலக்கொடை அளித்த செய்தி. கோயில் நிருவாகம், அரசு நிருவாகம் ஆகியவை பற்றிய செய்திகள் உள்ளன.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு ௩ வது பொங்கலூர்கா நாட்டு நின்மணியூரோம் எங்களூர் நஞ்சாதி கல நெல்விதை கிடன்தடியா
2. மினால் வீரராசேன்திர தேவர்க்கு நாங்கள் நாயினார் தான்தோன்றீசுவரமுடையாற்கு அமுதுபடிக்கு நிலமில்லை என்று விண்ணப்பஞ்செய்திட . . . .
3. ற்கு அந்நெல்விதை கலமும் நீர் வாத்தபடியால் கல்வெட்டாதபடியாலே மூன்றாவது முதல் மாயேசுரரும் ஊராரும் கல்வெட்ட வேணுமென்று சொல்ல அன்
4. னிலமாவது மத்தியானச் சொக்கன் கவருக்கு கிழக்கும் சிறுப்பிள்ளை செய்க்கு வடக்கும் காட்டுவாய்க்கு மேற்கும் மாணிக்கர் செ(ய்)க்கு தெற்கும் இன்னான் கெல்லை
5. விதைகலமும் கல்வெட்டிக்குக் குடுத்தோம் வீரராசேந்திரநேன் நீர்வாத்த படிக்கு கல்வெட்டிக் குடுத்தோம் மாயேசுரரும் நிர்மணி ஊரோமும் இவை பன்மாயேசுவரர் ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 97/2010**

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	: 12
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1219
ஊர்	: பொன்னிவாடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 273/1961–62
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 5
அரசன்	: வீரராசேந்திரன்		

இடம் : நிர்மலேஸ்வரர் கோயில் அருகில் உள்ள பாறை

குறிப்புரை : வெள்ளான் செவ்வாயில் குருடன் என்பவன் சந்தி விளக்கு வைத்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர ஷேவற்கு யாண்டு பன்னி
2. ரண்டாவது பொங்கலூர்கா னாட்டு நிர்மணியில் வெள்ளாளன்
3. செவ்வாயில் குருடன் மாணிக்கதேவன் நிர்மணி தேவற்
4. குச் சந்தியாதீபம் ஒன்றுக்கும் காணியுடைய சிவப்பி . . . .
5. . . . . . . ர . . . .
6. கோயில் புகுவான் சந்திராதித்தவரை செல்வதாக தஞ் . . . .
7. விச்சேன் குருடன் மாணிக்கதேவநேன் பன்மாயேசுவர ரசைஷ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 98/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 18ஆம் நூற்.
ஊர்	:	பொன்னிவாடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	276/1961–62
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
அரசன்	:	–			
இடம்	:	நிர்மலேஸ்வரர் கோயில் தூண்.			
குறிப்புரை	:	துண்டுக் கல்வெட்டு.			

கல்வெட்டு :

1. விரோதி கிருது பங்குனி உயக தேதி . . . . புதன் கிளமெய் தினம்
2. பொன்னிவாடி கிராமம் முத்து கவுண்டன் கோவிலுக்கு
3. த்தாழ்கிளங்கா . . . . த்து காண அடித்து வைத்த தூண்
4. உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 99/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13–ஆம் நூற்றாண்டு
ஊர்	: பொன்னிவாடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	275/1961–62
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
அரசன்	: –			

இடம் : நிர்மலேஸ்வரர் கோயில் கிழக்குச் சுவரில் கட்டப்பட்ட பலகைக் கல்

குறிப்புரை : பன்னிரெண்டு பணம் கொடுத்து நிலம் வாங்கிக் கொடை அளித்த செய்தி.

கல்வெட்டு :

1. . . . . பந்மரான திரிபுவநச்சக்கரவத்தி
2. . . . . நின்மணியில் வெள்ளாழரோம் மேற்படியூரில்
3. . . . . கொண்ட வராக பணம் பன்னிரண்டுக்கு
4. . . . . நிலம் காணியும் இந்நிலத்துக்கு எல்லையாவ
5. . . . . ராத்த . . கீழ் . . டி மலையஞ் செய்க்குத் தெற்கும்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 100/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	5
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1212
ஊர்	: பொன்னிவாடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	143/1967-68
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	8
அரசன்	: வீரராசேந்திரன்			

இடம் : நிர்மலேஸ்வரர் கோயில் முன்னுள்ள பாறை.

குறிப்புரை : சிதைந்த கல்வெட்டு. அமுதுபடிக்குக் கொடை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீர . . . . வேற்கு யாண்டு
2. நாலாவதற்கெதி . . . . ராசபுரத்தில் வியா
3. பாரி . . . . நிர்மணியில் மேலை ஞா
4. சற் . . . . திருப்புதியிதுக்கு அ
5. . . . . . . பொருள் கைக்கொண்
6. டு . . . . ப்பிராமணரில் சாலங்காய
7. கோத்திரத் . . . . ணியந் அவிநாசியும்
8. முக் . . . . மலரு ஆயின பலபடிலி
9. ருக் . . . . நெல்லில் தூணி அ
10. ந . . . . யுங்கொள்வதாக
11. கவாநேெ . . . . பச்சரிசியுமாவ
12. . . . . டங்கொடு கோயில் பு
13. குவா . . . . . பந்மாஹேசுர ரஷைஷ

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	8
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1215
ஊர்	:	பொன்னிவாடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	144/1967-68
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	9
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : நிர்மலேசுவரர் கோயில் கணேசர் கோயிலுக்கு அருகில் உள்ள கல்வெட்டு.

குறிப்புரை : அட்டாலைச் சேவகன் அனுத்திர பல்லவரையன் என்பவன் நிலம் விற்ற செய்தி கூறப்பெறுகின்றது. நில எல்லை குறிக்கும்போது காமிண்டன் நிலம் என்று பல நிலங்களின் பெயர்கள் குறிக்கப்பெறுகின்றன.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திரதேவற்கு யாண்டு நாலாவதற்க்
2. கெதிர் நாலாவது பொங்கலூற்கா னாட்டிற் கீரநூர் முதலி
3. களில் இயாழ்வல்லான் அட்டாலைச்
4. சேவகனான அனுத்திரப்பல்ல
5. வரையநேன் இராசராசபுரத்தில் வி
6. யாபாரி கோதை சொக்கனான வீரசே
7. கரச் சிலைசெட்டி பக்கலும் நீர்மணியி
8. ல் வெள்ளாநூரர் பக்கலும் இவர்கள் ப
9. க்கல் நான் பொருள் கைக்கொண்டு மண்ண
10. றவிற்ற நிலமாவது நிர்மணியில் மன்றா

11. டி பாண்டிய காமிண்டந் நிலமன்றாடி ப
12. க்கல் நெல்விதைக் கெல்லையாவது . . .
13. மாணிக்கவெ . . . . செய்க்கு மேற்கும் சி
14. றியாண்டாந் காமிண்டந் செய்க்கு வடக்கும் அதிய
15. மான் காமிண்ட செய்க்குக் கிழக்கும் கன்னி
16. யங்கவருக்குத் தெற்கும் இவ்வெல்லைக்
17. குட்பட்ட நிலம் அரைய்மாவும் வடகீழை
18. யிற் காணிக்கெல்லை சோழாண்டார்க்கு வ
19. டக்கும் தூாணிஆண்டான் செய்க்குக் கிழக்கு
20. ம் கவர்க்கு மேற்கும் இவ்வெல்லைக்குட்
21. பட்ட நிலங்காணியும் ஆக நெல் விதை கலமு
22. ம் பொருளறக் கொண்டு மண்ணற விற்றுள்ளேன்
23. அனுத்திரப் பல்லவரையநேந் இந்நிலங்
24. ங்கல நெல்விதை . . . ம் எந்நொ
25. பாதி தூாணிப்பதக்கு நெல்விதை
26. யுமேலை வாசலிற் பிள்ளையார்க்கு அமு
27. துபடிக்கு குடுத்தேன் வீரசேகரச்சி
28. லை செட்டியேன் மற்றைத் தூாணிப்
29. பதக்கும் மேலைவாசலிற் பிள்ளையார்க்கு
30. அமுதுபடிக்குக் கல்வெட்டிக் குடுத்
31. தோம் நிர்மணியில் வெள்ளாழரோ
32. ம் சந்திராதித்திய வரை செல்வதாகவு
33. ம் பந்மாயேஸ்வர ரகைஷ

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 102/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	15
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1222
ஊர்	:	பொன்னிவாடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	146/1967–68
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	10
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : நிர்மலேசுவரர் கோயில் கணேசர் கோயிலுக்கு முன்புள்ள பாறை.

குறிப்புரை : மிகவும் சிதைந்துள்ள துண்டுக் கல்வெட்டு

கல்வெட்டு :

1. . . . ஸ்ரீ திரிபுவனசக்கரவத்திகள் ரா
2. சேன்திரதேவன் யாண்டு பதின
3. ஞ்சாவது இராசராசபுரத்து அடிக்கீழ்த்தள
4. த்து விலைய
5. (5–12) கல்வெட்டு வரிகள் அழிந்துவிட்டது

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 103/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	11
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1218
ஊர்	:	பொன்னிவாடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	145/1967-68
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	11
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : நிர்மலேசுவரர் கோயில் கணேசர் கோயிலுக்கு முன்புள்ள பாறை.

குறிப்புரை : பொங்கலூர்கா நாட்டு நிர்மணி ஊரைச் சேர்ந்த வெள்ளாழன் செவ்வாயில் கண்ணன்பொத்தி என்பவனின் மனைவி சிறிய கண்டி என்பவள் மேலைவசலில் உள்ள பிள்ளையாற்கு சந்தியா தீபம் ஒன்று வைக்க ஓர் அச்சு பணம் கொடையளித்துள்ளாள்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திரதேவற்கு யாண்டு பதிநொந்
2. றாவது பொங்கலூர்க்கா நாட்டு நிர்மணியில் வெள்ளா
3. ழன் செவ்வாயில் கண்ணந் பொத்தி மனைக்கிழத்தி சி
4. றிய கண்டியேந் மிவ்வூர் மேலை வாசலிற் பிள்ளையா
5. ற்குச் சந்தியாதீபம் ஒன்றுக்கு அச்சொன்று ஒடுக்கி
6. நேன் இப்பொருள் கைக்கொண்டோம் இக்கோயில்
7. காணியுடைய சிவப்பிராமணர் சாலங்காய கோத்
8. திரத்தில் மணியந் வடுகநும் மணியந் அவிநாசியும் தி
9. ருமுக்கூடல் அவிநாசியும் இம்மூவோம் கைக்கொண்
10. டு சந்திராதித்தவரை செலுத்துவோமாகவுங் குட
11. ங்கொடு கோயில் புகுவார் எரிப்பாராக வஹாயேஸ்வ
12. ர இரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை　　தொடர் எண் :- 104/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	பொன்னிவாடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	147/1967–68
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	12
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : கணேசர் கோயிலுக்கு அருகில் உள்ள பாறை.

குறிப்புரை : சந்தி விளக்கு ஒன்று வைக்க ஒரு பழஞ்சலாகை அச்சுப் பணம் கொடை அளித்தமை பற்றிக் கூறுகின்றது.

கல்வெட்டு :

1. . . . . ந்திர
2. . . . . தனை
3. . . . . ண்டு இவ்
4. . . . . ர்நாட்டு
5. . . . . வெள்ளாழ
6. ன்நேன் . . . . களில் முன்மன
7. கப்படலநேன் மேற்படியூர்
8. நாயந்நார் நிர்மணிசுரமுடை
9. டயாற்கு நான் வைச்ச சன்தி
10. யாதீபம் ஒன்றுக்கும் நான்
11. குடுத்த பழஞ்சலாகை அச்

12. சு ஒன்று இவ்வச்சொன்று

13. ங்கைக் கொண்டு இவ்விளக்

14. கெரிப்போமாநோம் . . . . .இக்கோ

15. யில் காணியுடைய சிவப்பிரா

16. மணன் ஆலம்ப . . . .க்கோத்தி . . .

17. த்து திருமுக்கூடல் அவிநாசி

18. இவ்விளக்குச் செலுத்துவே நா

19. நேன் குடங்கொடு கோயில் புகு

20. வான் இத்திருவிளக்கெரிப்பாந

21. ாகவும் இது பஜாஹேஸ்வர

22. இரக்ஷை

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	: 19
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1292
ஊர்	: பொன்னிவாடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 148/1961-62
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்		
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 13
அரசன்	: மூன்றாம் விக்கிரமசோழன்		

இடம் : நிர்மலேசுவரர் கோயில் கணேசர் அருகில் உள்ள பாறை.

குறிப்புரை : நிர்மணியில் வசிக்கும் வெள்ளாளந் செவ்வாயில் காவலஞ் செம்பள்ளி என்பவன் நிர்மணியில் மேலை வசலில் அமைந்துள்ள பிள்ளையாற்குச் சந்தியா தீபம் ஒன்று வைக்க ஓர் அச்சு பணம் இக்கோயில் சிவப்பிராமணரிடம் கொடுத்து தீபமெரிய வழிவகைச் செய்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு பத்
2. தொன்பதாவது பொங்கலூர்க்கா நாட்டு நி
3. ர்மணியில் மேலை வாசலிற் பிள்ளையாற்குச் ச
4. ந்தியா தீபம் ஒந்றுக்கும் மேற்படியூர் வெள்
5. ளாளந் செவ்வாயில் காவலஞ் செம்பள்ளியேந்
6. இவ்வச்சொந்று ஒடுக்கிநேந் இப்பொருள் கை
7. க்கொண்டோம் காணி உடைய சிவப்பிராம
8. ணர் சாலங்காய கோத்திரத்தில் மணியந் வடுக
9. நு மணியந் அவிநாசியும் திருமுக்கூடல் அவிநாசி
10. யும் சந்திராதித்தவரை குடங்கொடு கோயில் பு
11. குவார் எரிப்பாராக பந்மாயேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 106/2010**

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	42
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1046
ஊர்	: குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	131/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1

அரசன் : கோக்கலிமூர்க்க விக்கிரமசோழன்

இடம் : அமிர்தகடேசுவரர் கோயில் மகாமண்டத்தூண்.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. கோகலிமூர்க்க ஸ்ரீவிக்கிரம சோழனின் 42–ஆவது ஆட்சியாண்டு மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோ
2. கலிமூர்க்க ஸ்ரீ
3. விக்கிரமசோழ
4. தேவற்கு திரு
5. வெழுத்திட்டு
6. ச் செல்லா நி
7. ன்ற யாண்டு
8. சயிஉ ஆவது
9. பொங்கலூர்
10. க்கா . . . .

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 107/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	: 11+1
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1219
ஊர்	: குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 117/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன்	: வீரராசேந்திரன்		

இடம் : வடுகநாதசுவாமி கோயில் கருவறை வடக்குச் சுவர்

குறிப்புரை : பொங்கலூர்க்க நாட்டு குண்டோடத்திலுள்ள குடுமிச்சிகளில் அங்கராயன் மனைவி வடுகப் பிள்ளையார்க்கு சந்தி விளக்கு வைக்க அச்சு பழஞ்சலாகை ஒன்று தானமளித்துள்ளச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு பதிநொந்றாவதுக்கெதிராவது பொங்கலூ
2. ர்க்கா நாட்டிற் குண்டோடத்திற் குடுமிச்சிகளில் சிங்கந்கோவியார் சிறுஅங்கராயந் மனை
3. க்கிழத்தி குண்டோடத்தில் வடுகம்பிள்ளையார் கோயிலுக்கு சந்தியா தீபமொந்றுக்கு ஒடுக்கின
4. அச்சு பழஞ்சலாகை ஒந்றுங் கொண்டோம் இக்கோயில் சிவப்பிராமணரில் காப்பிய கோத்திரத்
5. தில் உத்தமந் சொக்கநும் விடங்கந் ஆளவந்தாநாந சித்திரமேழிபட்டநும் இவ்விருவோம் கைக்
6. கொண்டோம் இச்சந்தியாதீபமொந்றும் குடங்[கொண்டு கே*]ாயில் புகுவார் சந்திராதித்தவரை செல்வதாக இது
7. [பந்]மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 108/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	44
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1251
ஊர்	:	குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	126/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	:	வீரராசேந்திரன்			
இடம்	:	வடுகநாத சுவாமி கோயில் தெற்குச் சுவர்			
குறிப்புரை	:	சந்திவிளக்கு வைக்க அச்சு ஒன்று கொடையளித்தச் செய்தி.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் வீரரா
2. சேந்திரதேவற்கு யாண்டு சயச வது கோதைமங்கலத்தி
3. ல் பா . . . . நித்தியகல்
4. யாணந் . . . . . தீபம் ஒன்று இசந்தியா தீப
5. பம் ஒன்றுக்கு ஒடுக்கின பழஞ்சலாகை அச்சு ஒன்று
6. ம் கொண்டோம் குண்டோடத்திலிருக்கும் சிவப்பிராமண
7. ரில் காப்பியக் கோத்திரத்து உத்தமந் சொக்கனும் விட
8. ங்கன் ஆள . . . . தானாந சித்திரமேழி பட்ட . . . .
9. கைக்கொண்டோம் குடங்கொண்டு கோயில் புகுவாந் சந்தி
10. ராதித்த வரை செலுத்துவதாக . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 109/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	125/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
அரசன்	:	–			

இடம் : வடுகநாத சுவாமி கோயில் தெற்குச் சுவர்

குறிப்புரை : வடுகப்பிள்ளையார்க்கு சந்திவிளக்கு வைக்க ஓர் அச்சு கொடை அளித்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [ா] . . . . . ஆவது பொங்கலூற்கா நாட்டில் குண்டோடத்தி . . . . . டுமரில் பிள்ளை பிள்ளளா
2. ன பிறைசூடியே . . . . சுரமுடையாற்கும் வடுகப்பிள்ளையாற்கும் புதனெண்ணைக் . . . . . ல் ஒரு பிடிக்கு ஒடுக்கின பணம் பத்துங் கைக்
3. கொண்டோம் . . . . . காப்பியக் கோத்திரத்தில் வடுகந் அன்னதாந்நம்பி . . . ட்டாரும் சொக்கப்பட்டன் ஆளுடையானுள்ளி
4. ட்டாரும் ஆவுடை . . . . . . ட்டாரும் கைக்கொண்டோம் இக்கோயிற் குடங்கொடு . . . . சந்திராதித்தவரை செலுத் . . . . .
5. மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 110/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	: 44
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1251
ஊர்	: குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 124/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 5
அரசன்	: வீரராசேந்திரன்		

இடம் : வடுகநாத சுவாமி கோயில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை : குண்டோடத்து முதலி காடன் உலகை வலம்வந்தான் என்பவன் சந்தி விளக்குக்கு ஓர் அச்சு கொடை அளித்தச் செய்தி.

கல்வெட்டு :

1. வீரராசேந்திர தேவற்கு யாண்டு
2. ௪௰௪ பொங்கலூற்கா நாட்டு குண்டோட
3. முதலிகள் குடுமரில் காடந் உலகை வலம்வந்தா
4. நேந் திருநிலை அழகிய பிள்ளையாற்கு சந்தியாதீபம் ஒந் . . . கு
5. நேந் நாய . . . .
6. ந் பழஞ்சலாகை ஒந்றுங் கைக்கொண்டோம் இக்கோயிற் காணியு
7. டைய சிவப்பிராமணரில் காப்பிய கோத்திரத்தில் உத்த
8. மந் சொக்கபட்டநுள்ளிட்டாரும் . . னபட்டந் ஆளுடையாநு
9. ள்ளிட்டாரும் இவச்சு கைக்கொண்டோம் குடங்கை கொண்டு கோயிற்பு
10. குவார் சந்திராதித்தவரை செலுத்துவதாக இது பந்மாஹேச்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 111/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	: 15
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 13–ஆம் நூற்றாண்டு
ஊர்	: குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 120/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 6
அரசன்	: –		
இடம்	: வடுகநாத கோயில் கிழக்குச் சுவர்		
குறிப்புரை	: திருநிலை அழகிய பிள்ளையார்க்கு ஒரு சந்திவிளக்கு வைக்க பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடையளிக்கப்பட்டுள்ளது.		

கல்வெட்டு :

1. . . . . தேவற்கு யாண்டு [யரு] வது பொங்கலூற்கா நாட்டிற் குண்
2. . . . . கும் வே . . . . . கூரில் பெரி . . . . . கபாலநேந் குண்டோடத்தில்
3. [திருநி]*லையழகியப் பிள்ளையாற்குச் சந்தியா [தீபத்துக்கு] ஒடுக்கிந பழஞ்சலாகை அச்சொன்று
4. . . . . . .பொ இக்கோயிலில் சிவப்பிராமண . . . . . கோத்திரத்தில் உத்தம சொக்
5. . . . . எயா . . . . . சித்திரமேழிபட்ட . . . . கோயில் புகுவாந்
6. . . . . இது பநாஹெஸ்வர ரகைஷ

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 112/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13–ஆம் நூற்.
ஊர்	:	குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	121/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
அரசன்	:	–			

இடம் : வடுகநாத சுவாமி கோயில் கிழக்குச் சுவர்

குறிப்புரை : வடுகப் பிள்ளையார்க்கு சந்திவிளக்கு ஒன்று வைக்க அச்சு பழஞ்சலாகை ஒன்று கொடையளித்தச் செய்தி.

கல்வெட்டு :

1. . . . .
2. . . . .
3. . . . .
4. மங்கலத்து இருக்கு . . . .
5. மலைய கட்டிகளில் ச
6. ாத்தந் சீதேவியேந் கு
7. ண்டோடத்தில் வடு
8. கப்பிள்ளையார்க்கு
9. சந்தியா தீபத்துக்கு ஒடுக்கி
10. ந அச்சு பழஞ்சலாகை ஒந்று

11. கைகொண்டோம் இக்கோயில்

12. ணி உடைய சிவப்பிராமணரில்

13. சித்திரமேழிப்பபட்ட நுள்

14. ளிட்டாருஞ் சொக்கபட்டநு

15. னிட்டாருங் குடங்கொடு கோ

16. யில் புகுவாந் சந்திராதித்

17. யவரை செலுத்துவதா

18. க பநூாஹெமஸ்வுற றகைக்ஷ

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 113/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13–ஆம் நூற்.
ஊர்	:	குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	122/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	8
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : வடுகநாத சுவாமி கோயில் கருவறைத் தெற்குச் சுவர்

குறிப்புரை : வடுகப் பிள்ளையாருக்கு சந்தி விளக்கு ஒன்று வைத்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்ரீவீரராசேந்திர தேவற்கு . . . . . .
2. டையில் ஆயிரவற்குச் சேநா . . . .
3. சோழப்பல்லவரையந் . . . . . .
4. ரயநார் வடுகப்பிள்ளை . . . . . .
5. ஒடுக்கிந அச்சுப்பழஞ் . . . . . .
6. கொண்டோம் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணரில் காப்பிய
7. கோத்திரத்தில் உத்தமந் சொக்க பட்டநும் விடங்கந் சித்திர
8. மேழிபட்டநும் இச்சந்தியா தீபம் குடங்கொடு கோயில் புகுவார்
9. சந்திராதித்தவரை செல்வதாக இது ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை

மாவட்டம் : திருப்பூர்		ஆட்சி ஆண்டு	: 24+5
வட்டம் : தாராபுரம்		வரலாற்று ஆண்டு	: கி.பி. 1236
ஊர் : குண்டடம்		இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 123/1920
மொழி : தமிழ்		முன் பதிப்பு	: –
எழுத்து : தமிழ்			
அரசு : கொங்குச் சோழர்		ஊர்க் கல்வெட்டு எண்	: 9
அரசன் : வீரராசேந்திரன்			

இடம் : வடுகநாத சுவாமி கோயில் கருவறைத் தெற்குச் சுவர்

குறிப்புரை : நரையனூர் நாட்டுத் தளிச்சயமான ராஜவிச்சாதிரபுரத்து வீரசோழன் திருமடைவிளாகத்தில் இருக்கும் வயிராகிகளில் திருவிளம் அழகியன் எனும் திருவீதிப்பிள்ளை என்பவன் குண்டடம் திருநிலை அழகிய பிள்ளையாற்கு சந்தியா தீபம் வைக்க பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடையளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேத்ர தேவற்கு யாண்டு உ௰௪ வதற்கெதிர் ரு வது ந
2. ரையநூர் நாட்டுத் தளிச்சயமான ராஜவிச்சாதிரபுரத்து வீரசோ
3. ழன் திருமடைவிளாகத்து வயிராகிகளில் திருவிளமழகியனாந
4. திருவீதிப்பிள்ளையேன் பொங்கலூற்கா ன்ாட்டுக் குண்டோடத்தில்
5. திருநிலையழகிய பிள்ளையாற்கு நான் வச்சச் சந்தியாதீபம் ஒன்று
6. க்கு நான் ஒடுக்கின பழஞ்சலாகை அச்சு இக்கோயிலில் காணியு
7. டைய சிவப்பிராமணர் சித்திரமேழி பட்டனுள்ளிட்டாரும் சொ
8. க்கியபட்டநுள்ளிட்டாரும் இவ்வச்சுக் கைக்கொண்டோம் சந்தியா தீ
9. பஞ் சந்திராதித்தவற் செலுத்துவோமானோம் மிது பன்மாஹேஸ்வர
10. ரக்ஷை உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 115/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கிபி. 19–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	10
அரசன்	:	–			

இடம் : வடுகநாத சுவாமி கோயில் நவக்கிரக மண்டப மேல் கூரை.

குறிப்புரை : நவக்கிரக வழிப்பாட்டின் முக்கியத்துவத்தைக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு :

1. சூரியன் சோமன் செவ்வாய் சொற்புதன் வியாழன் வெள்ளி
2. காரியுமி ராகு கேது கடவுளரென பரிநாமத்தாரில்
3. சக்கரத்தை தரித்தார் பூசித்தாலும் பாரிற்புத்திரரும்
4. அட்ட பாக்கிய நல்குந்தானே

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 116/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	24
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1234
ஊர்	:	குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	118/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	11
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : வடுகநாத சுவாமி கோயில் கருவறை கிழக்குச் சுவர்

குறிப்புரை : பிலாம்பிறைக் கோட்டை ஆயிரவர்படை சேனாபதி சந்திவிளக்குக் கொடை அளித்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு
2. உயச புலாம்பிறைக் கோட்டையில்
3. ஆயிரவற்குச் சேநாபதி . . . . . . கோ
4. கண்டந் பல்லவரையநேந் குண்டோ
5. டத்தில் வடுகப்பிள்ளையார் சந்தியா
6. தீபத்துக்கு ஒடுக்கிந அச்சு பழஞ்சலாகை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 117/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	15
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1222
ஊர்	:	குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	119/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	12
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : வடுகநாத சுவாமி கோயில் கருவறை கிழக்குச் சுவர்.

குறிப்புரை : பாண்டி மண்டலத்து கலவழி நாட்டைச் சேர்ந்த தேவரடியார் குண்டோடத்து திருநிலையழகிய பிள்ளயாற்கு ஒரு சந்தியா தீபம் வைத்தச் செய்தி.

கல்வெட்டு :

1. . . . ஸ்ரீதிரிபுவநச் சக்கரவத்திகள் வீரராசேந்த்ர தேவற்கு யாண்டு ய[ரு] சாவ
2. பாண்டி மண்டலத்துக் கலவழி நாட்டில் குருந்தகுளத்து கரையில் குன்றமேறி
3. . . . னையார் தேவரடியாரில் அம்மையாண்டாள் ஆளவந்தாநான அநன்தானநா நா . . . . .
4. . . . பொங்கலூர்க்கா நாட்டில் குண்டோடத்தில் பிள்ளையார் திருநிலையழகிய பிள்ளையாற் சந்தி
5. . . . ளுக்குக்கும் ஒடுக்கின அச்சு ஒன்றும் இக்கோயில் சிவப்பிராமணரில் காப்பிய கோத்திரத்தில் உத்தமஞ்
6. . . . சித்திரமேழி பட்டநும் குடங்கொடு கோயில் புகுவார் சந்திராதித்த
7. . . . செல்வதாக இது பந்நாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை　　　தொடர் எண் :- 118/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	6
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1213
ஊர்	:	குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	129/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	13
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : அமிர்தகடேஸ்வரர் கோயில் வாயில் வடக்கு பக்க கால்.

குறிப்புரை : மண்டபம் ஒன்றை குண்டோடத்து வாணியர் கட்டிய செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. வீரராஜே
3. ந்ஞ்ரு தேவ
4. ற்கு யாண்
5. டு ஆறாவது கு
6. ணடோடத்
7. தில் வாணி
8. யர் தன்ம
9. ம் இத்தி
10. ருமண்டம்
11. திசைமு
12. க்கியர் ரு
13. கைகூ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 119/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	10
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1159
ஊர்	:	குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	130/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	14
அரசன்	:	குலோத்துங்கன்			

இடம் : அமிர்தகடேசுவரர் கோயில் வாயில் இடது கால்.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. குண்டடது குடும்மரில் இருங்கோளன் என்பவன் குறிக்கப் பெறுகின்றான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ குலே
2. லாத்து
3. ங் சோழ
4. தேவர்க்கு
5. இயாண்
6. டு பத்தா
7. வது குண்
8. டோடத்தி
9. ல் குடும்மரில்
10. இருங்கோளன
11. ன் . . . காவ
12. நா . . யா . . கெ
13. ாங்க . . .

14. வார் மற்றுந்

15. ருவந் இத்தி

16. ருவாசல் திரு

17. மண்டபத் .

18. துக்கு சந்தி

19. யாதீபம் ஒன்றும்

20. விடாமல் சந்திராதித்தவரை

21. செலுத்தக்கட

22. வோமாகவும்

23. இது பந்[மாயே]சுர

24. ரர் இரச்சை.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 120/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	24
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1309
ஊர்	:	குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	132/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	15
அரசன்	:	சுந்தரபாண்டியன்			

இடம் : அமிர்தகடேசுவரர் கோயில் மண்டப நுழைவுவாயில் வலது கால்.

குறிப்புரை : குண்டோடத்து வாணிகர்கள் நிலைக்கால் செய்வித்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சிரி
2. சுந்தரபாண்டிய
3. தேவற்கு யா
4. ண்டு உ௰௪ வ
5. து பொங்க
6. லூற்கா நாட்
7. டில் குண்டோட
8. த்தில் வாணியரில்
9. எங்கள் தன்
10. மமாக செய்
11. வித்தோம்
12. இத்திருநி
13. லைக்காலுக்
14. கு எங்கள்
15. மக்கள் மக்
16. கள் அழிக்க . . . .
17. . . . சந்
18. திராதித்தவ
19. ரையும்
20. செய்விப்பே
21. பாமாகவும்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 121/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	15
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1280
ஊர்	:	குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	133/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	16
அரசன்	:	வீரபாண்டியன்			

இடம் : அமிர்தகடேசுவரர் சுவாமி மண்டப நுழைவுவாயில் இடது கால்.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. குண்டடம் வாணியர் குறிக்கப்பெறுகின்றனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. சிரி வீரபாண்
3. டிய தேவற்
4. கி யாண்டு ய௫
5. வது பொங்
6. கலூற்கா நா
7. ட்டிற் குண்
8. டோடத்திலிரு
9. க்கும் வாணி

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 122/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	11
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1218
ஊர்	:	குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	134/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	17
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : அமிர்தகடேசுவர் கோயில் முன்னுள்ள குளத்தின் அருகே உள்ள தூண்.

குறிப்புரை : தூண் கொடையளித்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. வீரராஜேஙூ தே
3. வக்கு யாண்டு
4. பதின் ஒன்றாவது
5. கோடிக்காரை
6. த்தோமு ஊராளி
7. களில் பெருமா
8. ள் பெருமாளாந வீ
9. ரசோழ இருங்
10. கோளநேந் இ
11. ட்ட . . ங் . . . க்க கால்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 123/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	: 20
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1285
ஊர்	: குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 128/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: கொங்குப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 18
அரசன்	: வீரபாண்டியன்		

இடம் : வடுகநாத சுவாமி கோயில் கருவறை நுழைவு வாயில்.

குறிப்புரை : வணிகர்கள் அளித்த கொடையைப் பற்றி கூறுகின்றது. வாணிகம் பற்றி ஆய்வு செய்வதற்கு சிறந்த சான்று.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி
2. ஸ்ரீவீர
3. பாண்
4. டிய ே
5. தவற்கு
6. யாண்
7. டு ௰௫
8. ாவதுக்
9. கு எதிரி
10. ரு வது
11. பொங்
12. கலூற்
13. கா நாட்
14. டு குண்டோ
15. டத்தி
16. ல் வடுக
17. ப்பிள்ளை
18. யாற்கு ஏறு
19. சாத்து மிறங்கு
20. சாத்து நான்கு
21. திசை பதினெ
22. ண்விஷையத்
23. தார் ம
24. . . . தபுரத்து

25. பெரி புடை
26. வப் பொதிநூ
27. ற்பொதி உப்
28. புப் பொதி
29. ஆழி சுமைப்
30. புடவைகட்
31. டு மற்றுமெ
32. ப்பேறப்பட்ட
33. னவும் இவ்வூ
34. ரிலும் கால்
35. பாடுகளிலும்
36. வந்த கூடத்து
37. க்கு திருப்பணி
38. க்குடலாக்கி
39. டும் பணம் ஒ
40. ன்றும் சில
41. வானப் பொதிக்
42. கு பொதி ஒன்று
43. க்குப் பணம் ஒரு
44. மாத்தாவதாக
45. வும் இதுசந்திரா
46. தித்தர்வரை செ
47. ல்வதாகவும்
48. இப்படி
49. கிழச்ச
50. மையம்
51. பணிப்பச்
52. சமைய
53. க் கரண
54. த்தான் எ
55. ழுத்து
56. இது பன்
57. மாஹே
58. ஸ்வுரர
59. சைஷ

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1945
ஊர்	:	குண்டடம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	19
அரசன்	:	–			

இடம் : வடுக நாதசுவாமி கோயில் அர்த்தமண்டப நுழைவு வாயில் வலதுப்புறம் சுவற்றில் உள்ளது.

குறிப்புரை : வடுகநாத சுவாமி கோயிலைப் புதுப்பித்துக் கட்டியதைப் பற்றி கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு :

1. ஸ்ரீகொங்கு வடுகநாத சுவாமி துணை
2. 1945 பார்த்திப ந தை மீ 29 தீ௳ பேரூர் ஸ்ரீஞானச்சிவாச்சாரியார் சுவாமிகள் சங்கராண்டம்
3. பாளையம் பட்டாக்காரர் திருபெரியன வேணாவுடைய கவுண்டர் இவர்களின் பெரும் முயற்சியா
4. லும் கீழ்முகம் மேல்முகம் பொது உதவியாலும் குண்டடம் வடுகநாத சுவாமி ஆல
5. யத்தை புதுப்பித்து ஷ பட்டக்காரார் அவர்களின் பாரியை லசஷ்மி அம்மையார் அவர்களின்
6. சகாயத்தாலும் நந்தன ந ஐப்பசி மீ 15 தீ௳ கும்பாபிஷேகம் நடைப்பெற்றது.
7. ஆலய அபிமாணிகள் குண்டம் 31.10.52

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 125/2010**

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 15–ஆம் நூற்.
ஊர்	: புஞ்சைதலையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: விஜயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	: மல்லிகார்ஜுனர்?			

இடம் : பெருமாள் கோயில் மேற்குப்புறச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டு முழுமையடையவில்லை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஊஹஊணுஜெெபழுாரு ஸ்ரீவீர . . . . . . குமார மல்லிகா . . . . .
. [வ]திருக்கள் கெம்பய நாக்க உடை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 126/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	எல்காம் வலசு	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	–
அரசன்	:	–			
இடம்	:	கோவை அகழ்வைப்பகம்			

குறிப்புரை : நானாதேசி, ஐந்நூற்றுவர், அஞ்சுகரை நாடு அடிக்கீழ்தளம், நகரம் ஆகிய குழுவினர் சேர்ந்து எறிவீரப்பட்டணம் அமைத்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வத்திஸ்ரீ தெந்க
2. ரை நாட்டு நீலம்
3. பேரூர் னானா தேசி
4. திசை மடிஎறி
5. யுர் எறிவீரபட்ட
6. ணக்கல் அஞ்சு
7. கரை நாடும்
8. அடிக்கீழ் தளமு
9. ம் பதினெண் வி
10. ஷயமும் எம்மி
11. லிசைந்தபடி யீதளத்தில் நாலுவாசலி
12. ல் பட்டாயர் வசம் நாலு காலும் சிங்காத
13. னமும் உடையாராக

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 127/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	17
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1166
ஊர்	:	மறவபாளையம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	181/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	முதலாம் குலோத்துங்கன்			

இடம் : அப்பரமேசுவர சுவாமி கோயில் வடக்குச் சுவர்

குறிப்புரை : தென்கரை நாட்டுக் கொற்றனூரில் உள்ள அப்பரமேஸ்வரர் கோயில் இறைவனுக்கு விடியல் வழிபாட்டிற்கு நீலன் பேரூரில் மேல்கரையிலுள்ள ஏழுமா நிலம் அளித்த செய்தி. இந்த ஏழுமா நிலத்தின் வாயிலாக இராசகேசரி மரக்காலால் 24 கலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற
2. திருநல்லியாண்டு பதினேழாவது தென்கரை நாட்டுக் கொற்றனூரில் ஆளுடையார்
3. அப்பரமேசுரமுடையார்க்குச் சிறுகாலைச் சந்திக்கு குடுத்த நெல் இராசகேசரி மரக்காலால்
4. நெல் இருபத்துநாற்கலத்துக்கு விட்ட நிலமாவது தென்கரைநாட்டு நீலன்பேரூரில்
5. மேல் கரையில் ஆளுடையநாயனார் நிலத்துக்கு வடகொழிஞ்சிப்பாடி அழகிய
6. சொக்கனார் நிலத்துக்கு தெற்குத் தென்வடல் நிலத்துக்குக் கிழக்குப் புளிபுரத்துக்கு மேற்குத்தாங்கல்

7. ரு^எஉ இந்நிலம் ஏழுமாவும் இறையிலியாகக் குடுத்தமைக்கு நம்வாசலிற் போந்த கடமை

8. பாடும் கேட்கக்கடவார்கள் அல்லவாகவும் இந்நிலம் ஏழுமாவும் சந்திராதித்தவரை செல்வதாகச்செ

9. சம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக் கொள்ளக் கடவார்களாகவும் இத்தன்மம் அழித்தவன் எழுச்சமறுவான்

10. பன்மாயேசுர ரக்ஷை உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 128/2010**

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	14
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1221
ஊர்	: பிரம்மியம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	182/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	: வீரராசேந்திரன்			

இடம் : திருவலஞ்சுழிநாதர் கோயில் அர்த்தமண்டபம் வடக்குச் சுவர்

குறிப்புரை : தென்கரை நாட்டுப் பிரமதேயம் ஸ்ரீவீரசங்காத சதுர்வேதிமங்கலத்தில் இருக்கும் வியாபாரி பிச்சன் பெரியான் என்பவன் இவ்வூர் திருவலஞ்சுழிநாயநார் கோயிலிலுள்ள சேத்திர பாலபிள்யைார் (பைரவர்) அமுதுபடிக்காக எட்டு அமுதன் அச்சு கொடுத்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவீரரா
2. ஜேந்திர தேவர்க்கு இயாண்டு பதிநாலாவ
3. து தெந்கரை நாட்டுப் பிரமதேயம் ஸ்ரீவீரசங்
4. காதசதுவேதிமங்கலத்து இருக்கும் வியாபாரி பிச்சந் பெரியா
5. நாந ஈசந்கோவநேந் இவ்வூர் உடையார் திருவலஞ்சுழி நாயநார் கோயிலில் க்ஷேத்ர பாலப்பிள்ளையாற்கு அமுதுப்படிக்கு ஒ
6. டுக்கின அமுதந் அச்சு மூன்று சந்த்ராதித்தவல் . . . ஸ்ரீபண்டாரத்தில் கொண்ட அமுதன் அச்சு அஞ்சு ஆக இவ்வச்சு எட்டும் கொண்டு நித்தம் நாழி அரியும் கறி அமுதுயள்ளிட்ட விஞ்ச
7. நங்களும் நெய்யமுது அடைக்காயமுது இலையமுதும் செலுத்துவேன்னாக இவச்சு கொண்டேந் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணந் உதைய சைவவேசுரமுடைய
8. நாந உய்யக்கொண்டாநேந் சந்திராதித்தவல் செலுத்துவேநாந்நேந் இது பந்மாஹேஸ்வர ரக்ஷை

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	41
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1045
ஊர்	:	பிரம்மியம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	183/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	வட்டெழுத்து			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	:	கோக்கலிமூர்க்க விக்கிரமசோழன்			

இடம் : திருவலஞ்சுழிநாதர் கோயில் அர்த்த மண்டபம் வடக்குச் சுவர்

குறிப்புரை : இக்கல்வெட்டில் மெய்கீர்த்தி வருகின்றது. வீரசங்காதன் சூற்றிய தேவன் 55 கழஞ்சு பொன் கொடுத்தச் செய்தி. இந்தப் பொன்னால் வந்த வட்டி நெல்லை அமுதுபடிக்கும், பூசை செய்யும் பிராமணர்கள் உணவுக்கு அளிக்கும்படி கூறிய செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோக்கலிமூர்க்க ஸ்ரீவிக்கிரமசோழ தேவர்க்குத் திருவெழுத்தெட்டுச் செங்கோலோச்சி வெள்ளி வெண்குடைமிளிர வேந்திநாடு வளம் படுத்து நைய்யுங்குடிவோம்பி ஆறில் ஒந்று கொண்
2. டல்லவை கடிந்து கோவீற்றிருந்து குடிபுறங்காத்துப் பெற்றக் குழவிக்குற்ற நற்றாய்போல திருமிகு சிறப்பிற் செல்லாநின்ற திருநல்லியாண்டு நாற்பத்தொன்றாவது
3. வடகரைத் திருக்கழுமலநாட்டு நந்தியந் நல்லூருடையாந் வீரசங்காதந் சூற்றியதேவன் வானவனுத்தர மந்திரியாமிந நாநாதேசிய் நாட்டுச் செட்டி பக்கல் தென்கரை நாட்டு ஸ்ரு
4. ஹதேயம் ஸ்ரீவீரசங்காத சதுர்வேதிமங்கலத்து ஸபையோம் இவர் பக்கல் கொண்ட பொன் பரகேசரிக்கல்லால் துளைநிறைச் செம்பொன் ஐயம்பத்தைய்ந்து கழஞ்சு இப்பொன் ஐயம்பத்தைங் கழஞ்சு

5. சிநால் வந்த அவைய்செலகார் பசானம் ஆண்டொந்று நூற்றொருபதின்கலமுங் கொண்டு திருவலஞ்சுழி வபரமேஶ்வரர் கோயிலிலே ஸ்ராஹ்மணர்க்கு பண்ண வைச்ச கலம் . . . . .நிலம் இப

6. ரகேஸரிக்காலால்க் குறுணியாக மூன்று கலத்துக்கும் நிசதம் மூன்று குறுணியால் நெல் ஆண்டுக்குத் தொண்ணூற்றுக்கலமும் நிச்சமாடும் ஸ்ராஹ்மணனுக்கு நிச்சம் பரகேஸரி அந்நூ . . . . ஆ . . . . கல நே . . .

7. ஒரு தூணிக்குறுணியும் ஆட்டொரு ஆட்டைக்கு நெல்க்கலநே முக்குறுணியும் ஆக நெல் நூற்றொருபதின்கலத்தாலும் இக்கலம் மூன்றுக்கும்மாய்முள்ளிட்டு மூன்று கறியும் ஒரு கலத்துக்குக் காணத்தால் . . . . .

8. ம் ஒரு பிடி அரை நெய்யுங் கிழாளம் பேராலிரண்டு பாக்கும் அஞ்சு வெற்றிலையும் இப்படி சந்த்ராதித்தவல் நிற்க மூன்று கலமும் ஊட்டுவதாக நாம் ஸ஭ையோம் வானவநுத்தர மந்திரியார்க்கு இது ரக்ஷிப்பான் ஸ்ரீபாதம் என்தலைமேலேயிது பந்மாஹேஶ்வர ரக்ஷை[II]

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 130/2010

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	3
வட்டம்	:	தாராப்புரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1210
ஊர்	:	பிரம்மியம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	184/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : திருவலஞ்சுழிநாதர் கோயில் அர்த்தமண்டபம் வடக்குச் சுவர்

குறிப்புரை : அரசன் சாமாந்தன் தங்கையார் அமுதுபடிக்கு பழவாணியோடு ஒக்கும் பொன் நாற்பதரை கழஞ்சு அளித்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ தி௱புவநச்சக௱வத்திகள் ஸ்ரீவீரராஜேந்திர தேவற்கு யாண்டு மூன்றாவது தெந்கரைநாட்டு ப்ர௱ஹ்மதேயம் ஸ்ரீவீரசங்காதச் சதுர்வேதிமங்கலத்து ஸபையோம் எங்கள் சாமந்தன் . . . . எங்களூர் திருவலஞ்சுழி மஹாதேவற்கு தங்கள் தங்கையார் . . . .ஜெ
2. ந்சுதேவர்நம்பி வட்ட . . .கடைக்குறிச்சியாழ்வாரைச் சாத்திப் பள்ளியறை நாச்சியாரை எழுந்தருளுவிச்சி இவர்க்கு அமுதுபடி சிறுகாலைச்சந்தி இருநாழியும் ஆக அரிசி அறுநாழியும் கறியமுது நெய்யமுது மிளகமுது தையிரமுது
3. இலையமுது அடைக்காயமுது உட்பட ஒந்று மூன்றாக நாளொந்றுக்கும் பதக்கிரு நாழியாக ஆண்டொந்றுக்கு நெய் அறுபத்தேழு கலநே தூணிபதக்கும் ஆநந்தகூத்தனாலே செல்வதாக ஸ்ரீபண்டாரத்துக்கு எங்களிடையிலொடுக்கிந துளை
4. ப்பொந் பழவாணியோடுப்பது நாற்பதிந்கழஞ்சரையும் நாங்கள் கைக்கொண்டு யித்தேவர் ஸ்ரீபண்டாரத்தில்லே கூட்டி மற்றைப் பண்டாரத்தில் பொந் குடுக்கும்படியே உபயத்துக்கு குடுத்து . . . பயத்தாலு . . .

5. செலுத்திவிப்போமாகவும் யிவுபையம் பொந் இல்லையாகிலும் உபயத்துக்கு கொண்டவர்கள் பொந் ஒடுக்கிநாராகிலும் யிவ்வரிசி அறுநாழியும் முதலில் தட்டாமே மூலஷேவர்க்கும் ஆநந்த கூத்தற்கும் அமுதுபடி செ . . .

6. சலுத்திவிப்போமாநோம் வீரசங்காத சதுவேதிமங்கலத்து ஸபையோம் யித்தந்மம் சந்திராதித்தவற் செல்வதாக யிது பநாஹெஸ்வர ரகைஷ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 131/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	42
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1046
ஊர்	:	பிரம்மியம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	185/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	வட்டெழுத்து			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
அரசன்	:	கோக்கலிமூர்க்க விக்கிரமச்சோழன்			
இடம்	:	திருவலஞ்சுழிநாதர் கோயில் கருவறை வடக்குச் சுவர்			

குறிப்புரை : பெருமாள் பெருந்தனத்து தரையர்களில் நக்கன் விடங்கன் எனும் விக்கிரம சோழப் பல்லவதரையன் திருவலஞ்சுழி பரமேசுவரருக்கு நந்தாவிளக்கெரிக்க பதினைந்து கழஞ்சு பொன் கொடுத்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோக்கலிமூர்க்க விக்ரம சோளதேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செங்கோலோச்சி
2. வெள்ளிவெண்குடைமிளிர வேந்தி நாடுவளம்படுத்து நயுங்குடிவோம்பி ஆறிலொன்று கொண்டல்லவை
3. கடிந்து கோவிற்றிருந்து குடிபுறங்காத்துப் பெற்ற குழவிக்குற்ற நற்றாய் போலச் செல்லா நின்ற திருநல்லியாண்டு ௪௰௨வது பெருமாள் பெருந்
4. தனத்து தரையர்களில் நக்கந் விடங்கனான விக்கிரமசோழப் பல்லவதரையநேந் நக்கந்குன்றந் . . . வ்யாதித்தரமையில் அவரைச்சாத்தித் தெ
5. ன்கரைநாட்டு ப்ரஹ்மதேயம் ஸ்ரீவீரசங்காத சதுர்வேதிமங்கலத்துத் திருவலஞ்சுழிப் பரமேஸ்வரர்க்கு தூண்டா விளக்காய் சந்த்ராதித்தவல் நின்றெரிய வைத்த தி
6. ருநொந்தா விளக்கொன்றுக்கும் வைச்ச பரகேசரிக்கல்லால்த் துளைநிறை செம்பொந் பதிநைங்கழஞ்சும் ஸபையார் வசம் எடுத்துக் குடுத்தேந் விக்கிரமசோ
7. ழப்பல்லவதரையநேன் இவரிப்பொந் கொண்டு இவ்விளக்கொன்றும் சந்த்ராதித்தவத் எரிப்பதாக கல்வெட்டிக்குடுத்தோம் ஸபையோம் நக்கந் கு
8. ன்றநேன் இஃது பந்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் :- 132/2010

மாவட்டம்	: திருப்பூர்	ஆட்சி ஆண்டு	: 5
வட்டம்	: தாராபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1212
ஊர்	: பிரம்மியம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 186/1920
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 5
அரசன்	: வீரராசேந்திரன்		

இடம் : திருவலஞ்சுழிநாதர் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : பெருமாள் கைக்கோளரில் (அரசர் படை வீரர்) தேவன் மாதேவன் எனும் கலிகடிந்த சோழமாராயன் என்பவன் திருவலஞ்சுழி மாதேவற்கு சந்திவிளக்கெரிக்க இருகழஞ்சு பொன் கொடுத்தச் செய்தி.

கல்வெட்டு :

